குழந்தைகள் பத்திரிகை

11-5-1975

50 காசு

கோகுலம்



சரியான வேளையில் சரியான வேலை...



49F-203R-TAM


கோகுலம்


மலர் 4 □ இதழ் 3
மே 11, 1975
ராட்சஸ, சித்திரை 28



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்


சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் ரு. 13-00
ஆறு மாதம் ரு. 6-50
வெளிநாடுகள் :
ஆண்டுச் சந்தா ரு 27-50





△ இது ஒரு கத்தி. மெல்லிய எஃகினால் உருவான இதில் தங்கத்தினால் வேலைப்பாடு செய்யப்பட்டிருக்கும். ஆள்காட்டி விரலினால் இதைச் சுற்றித் தலைக்கு மேலே உயர்த்தி வீசுவார்கள் (சக்ராயுதம் போல) எண்பது தப்படி தூரத்திலிருப்பவனின் உயிரையும் குடிக்கும் ஆற்றல் பெற்ற இந்தக் கத்தியை உபயோகிப்பவர் யார்?

△ நெற்றியிலே கொம்பு முளைத்த குதிரை இருந்ததில்லை. ஆனால் அப்படி இருந்ததாகப் பழங்கால மக்கள் நம்பினார்கள். அதற்கு ஆதாரமாக அதன் கொம்பையும் காட்டினார்கள். ஆனால் அது குதிரையின் கொம்பல்ல. கடலில் வாழும் ஒருவகை மீனுக்கு உள்ள கொம்பு அது. கற்பனைக் குதிரைக்கு என்ன பெயர் - நிஜமான கொம்புடைய மீனுக்கு என்ன பெயர் தெரியுமா ?





முழ நீள முகம் கொண்ட இது கலைமான் குடும்பத்தைச் சேர்ந்தது. ஆப்பிரிக்காவின் தெ... கிழக்குப் பகுதிகளில் வசிக்கும் இது வரிக் குதிரை, ஒட்டைச் சிவிங்கிகளுடன் காணப்படும். வேகமாக ஓடக் கூடியது. நம் சென்னை மிருகக் காட்சிசாலையிலும் இருக்கிறது. இதன் பெயர் என்ன ?

இது என்ன?

விடை
20-ம் பக்கம்



அறநெறி

திருமுருக கிருபானந்தவாரியார்

3. “சத்யம் வத”

“உண்மையே உரை” என்று வேதம் கூறுகின்றது. உண்மை உயர்வு தரும். இதனை இந்தக் கதை உணர்த்துகின்றது.

சங்கனூரில் பிங்கலன் என்ற ஒரு வேளாளன் வாழ்ந்தான். அவன் தாளாளனாக நன்கு உழைத்துப் பொருள் ஈட்டினான். அவன் இரக்கம் உடையவன். அவனை நாடி வந்த வறிஞர்கட்கு உண்டியும் உடையும் தந்தான். ஈத்து உவக்கும் இனிமையாளன். வர வர அவன்பால் வந்து கேட்போர் கூட்டம் பெருகியது. பிங்கலன் ஏழையாகிவிட்டான். அவன் குடும்பம் வாடியது. வறுமை தொடர்ந்தது. என்ன செய்வான்? ஏங்கினான்.

''உழைத்து உண்'' என்ற பழமொழியை உன்னினான். கடவுள் கொடுத்த கையும் காலும் இருக்கின்றன. கை படைத்த நாம் ஏன் உழைத்து வாழக்கூடாது?'' என்று எண்ணினான்.

கோடாலியை எடுத்துக் கொண்டு காட்டுக்குச் சென்றான். காய்ந்த விறகுகளை வெட்டி, சுமையாகக் கட்டி நகரங்களில் விற்றான். அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு, கேழ்வரகு, கம்பு சோளம் இவைகளை வாங்கி, கஞ்சி செய்து குடும்பத்தைக் காப்பாற்றினான்.


ஒரு நாள் கோடாலியுடன் காட்டுக்குச் சென்றான். ஒரு பெரிய நதிக்கரையில் ஒரு பெரிய மரம் வளைந்து சாய்ந்திருந்தது. அதன் மீது ஏறி விறகு வெட்டினான். அவனுடைய கோடாலி நதியின் ஆழத்தில் வீழ்ந்து விட்டது. தொழிலுக்குத் துணையாக இருந்த கோடாலி தொலைந்தது. அவன் என்ன செய்வான்? திகைத்தான்.

'' தெய்வமே ! கருணைக் கடலே ! என் கோடாலி தொலைந்துவிட்டதே ! இனி நான் எவ்வாறு வாழ்வேன் ? என் மனைவி மக்கள் பசியால் பரிதவிப்பார்களே. அந்தோ ! கெட்டேன் '' என்று கடவுளின் கருணை வேண்டி அழுதான். தொழுதான்.

அவன் முன் ஒரு தேவதூதன் தோன்றினான்.

''அப்பா ! ஏன் அழுகின்றாய் ?''

''என் கோடாலி நதியில் வீழ்ந்து விட்டது. ஆழமான ஆறு. என்றால்





இறங்கி எடுக்கமுடியாது. கோடாலியால் விறகு வெட்டி வாழ்கின்றேன்.''

''அப்பா! நீ அழாதே. எனக்கு நீரில் முழுகவும் நீந்தவும் தெரியும். நான் எடுத்துத் தருவேன்'' என்றான்.

தேவதூதன் நதியில் மூழ்கி ஒரு வெள்ளிக் கோடாலியை எடுத்துப் பிங்கலன் கையில் கொடுத்தான்.



பிங்கலன், ''அன்பா! இது வெள்ளி கோடாலி; என் கோடாலி அன்று ''என்றான்.

தேவதூதன் வெள்ளி கோடாலியை நதியில் எறிந்துவிட்டு, மீளவும் முழுகிப் பளபள என்றுள்ளதொரு பொன் கோடாலியை எடுத்துக் கொடுத்தான்.

பிங்கலன், ''ஐயனே! இதுவும் என்னுடையது அன்று. என் கோடாலி இரும்புக் கோடாலி '' என்றான்.

தேவதூதன் பொன் கோடாலியை ஆற்றில் எறிந்துவிட்டு மீளவும் முழுகி இரும்புக் கோடாலியை எடுத்துக் கொடுத்தான். பிங்கலன், ''ஆம் இது தான் என் கோடாலி'' என்று கூறி மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான்.

தேவதூதன் அகமிக மகிழ்ந்தான். 'ஆ! இவன் பரம ஏழையாக இருந்தும் துராசை இல்லாமல் இருக்கின்றான். பொன் வெள்ளிக் கோடாலிகளை என்னுடையதல்ல என்று உண்மையை உரைக்கின்றான். இவன் வறுமையிலும் செம்மையுடையவனாக இருக்கின்றான். இவனை வாழ்விக்க வேண்டும்' என்று இரங்கினான்.

பொன் கோடாலியையும், வெள்ளிக் கோடாலியையும் அவனிடமே தந்து இவை என் பரிசு என்று கூறி மறைந்தான். பிங்கலன் பொன் வெள்ளிக் கோடாலிகளைக் கொண்டு போய் விற்றான். அதன் மூலம் பொருள் ஈட்டித் தருமம் செய்து மகிழ்வுடன் வாழ்ந்தான்.

என்றும் உண்மை மனிதனை உயர்த்தும்.



இந்திரா கிருஷ்ணன்

விற்பனைக்கு ஒரு தங்கை!

இது சில வருடங்களுக்கு முன்னால் நடந்த ஒரு சுவையான சம்பவம். இப்போது நினைத்துப் பார்த்தால்கூட அழுகையும் சிரிப்பும் கலந்துதான் வருகின்றன.

அப்பொழுது எனக்கு வயது ஒன்பது, என் தம்பி ரவிக்கு வயது ஏழு, என் தங்கை 'சண்டைக்காரி' சாவித்திரிக்கு வயது ஐந்து. சாவித்திரிக்கு இப்படிப் பட்டம் இட்டது நானும் ரவியும்தான். பாவம்! அதை வாங்கிக் கட்டிக்கொள்கிற வயது அவளுக்கில்லைதான். ஆனால், அப்போ ரவிக்கும் எனக்கும் அவள் மேல் இருந்த வெறுப்பில் அவளை எப்படியும் கூப்பிடத் தயாராக இருந்தோம்.

ரவியும் நானும் எத்தனையோ முரட்டுத்தனமான விளையாட்டுக்கள் விளையாடுவோம். அந்த வயதில் அதெல்லாம் இயற்கைதானே? இந்த சாவித்திரிக்கு அதெல்லாம் ஒன்றும் பிடிக்காது. கோள் சொல்லத் தயாராக நிற்பாள். வீட்டுப் புளிய மரத்தில் புளியங்காய் அடித்தாலோ, பக்கத்து வீட்டு மாமரத்தில் காயைப் பறித்துத் தின்

ருலோ, உடனுக்குடன் அம்மாவிடம் புகார் போய் விடும்.

ஒரு நாள் ரவிக்கும் எனக்கும் ஒரு போட்டி—ஏதாவது ஒரு ஓடுகிற வஸ்துவைக் குறிபார்த்து அடிக்க வேண்டும். எங்களுக்குத் தென்பட்டது பக்கத்து வீட்டு அழகான நாய்க் குட்டிதான். அது தோட்டத்தில் ஓடி விளையாடிக் கொண்டிருந்தது. ரவிக்கு அசாத்திய குறி. பார்த்து அதன் கால் மேல் போட்டான் ஓர் அடி. அவ்வளவுதான். அது துடித்து அழுதது. நாங்கள் இருவரும் நேராக வாழைத் தோட்டத்துப் பக்கம் எடுத்தோம் ஓட்டம். அரை மணி நேரம் கழித்து எதுவும் தெரியாதது போல் வீட்டுக்குள் நுழையும் போதுதான் தெரிந்தது, எங்கள் நாயடி விளையாட்டு சாவித்திரியின் பார்வையிலிருந்து தப்பவில்லை என்று. அப்பா கையைத் தேய்த்துக் கொண்டு நின்றிருந்தார் எங்களை வரவேற்க. அப்புறம் கேட்கவேண்டுமா எங்கள் கதியை? சாவித்திரியின் மேல் எனக்கும் ரவிக்கும் வந்த ஆத்திரம் கொஞ்சம் நஞ்சம் இல்லை.

இரவு எங்கள் இருவருக்கும் தூக்கமே வரவில்லை. அப்பா கொடுத்த அடியினால் முதுகு எரிச்சல் ஒருபுறம். சாவித்திரியின் மேல் மன எரிச்சல் மற்றொருபுறம். குருட்டு யோசனைகள் வந்து போயின. அதில் பள்ளிக்கூடப் பாடங்களும் இடம் பெற்றன. அப்பொழுது நாங்கள் புராதன சரித்திரம் அரைகுறையாகப் படித்துக் கொண்டிருந்தோம். அதில் அடிமை வியாபாரம் பற்றியெல்லாம்கூட வந்திருந்தது. அது என்னமோ அப்போது நினைவில் வந்தது. உடனே 'ஐடியா' ஒன்று பளிச்சிட்டது. **'சாவித்திரியை விற்றுவிட்டால் என்ன?'** எங்கள் கஷ்டங்களுக்கெல்லாம் விடிவு ஏற்படுமே! துள்ளி எழுந்திருந்தேன் படுக்கையை விட்டு.

மனது துடித்துக் கொண்டிருக்கும் வேகத்தில், என் 'ஐடியா'வை ரவிக்குச் சொல்ல நா எழவே இல்லை. எப்படியோ மூச்சு முட்டச் சொல்லி விட்டேன். பொழுது விடிந்தால் ஞாயிற்றுக் கிழமை. காலையில் அப்பா 'கால்ஃப்' ஆடப் போய் விடுவார் அம்மா, 'ஞாயிற்றுக் கிழமை ஸ்பெஷல்' ஏதாவது பண்ணுகிறேன் என்று சமையலறைக்குள்ளே போய் விடுவாள். சாவித்திரியை ஆசை காட்டி நடத்தி அழைத்துப் போகலாம். எங்கள் வீட்டிலிருந்து 'புராணை கிலா' அதுதான் பழைய கோட்டைப் பகுதி' ரொம்ப தூரம் ஒன்றும் இல்லை. நாங்கள் நினைத்து வைத்துள்ள புராதன வியாபாரத்துக்கு 'புராணை கிலா' வினுள் தான் சரியான ஆசாமியைப் பிடிக்கலாம் என்று நினைத்தோம். இப்படிப் பேசிப் பேசி இரவுப் பொழுதைக் கழித்தோம்.

காலையில் டிபன் காப்பி முடிந்தது. அப்பா கிளம்பும்வரையில் நாங்கள் எப்படிப் பொறுமையாக இருந்



தோம் என்பது தெரியாது. சாவித்திரிக்குப் பிடித்த 'பாப்கார்ன்' ஒரு பை நிறைய எடுத்துக் கொண்டோம். அம்மாவிடம் சொல்லிக்கொண்டு, சாவித்திரியை 'வாக்கிங்' போகலாம் என்று அழைத்துக் கொண்டு போக ஆரம்பித்தோம், எங்கள் மறக்க முடியாத யாத்திரையை. ஏனோ எங்களிருவருக்கும் 'பாப்கார்ன்' சாப்பிடத் தோணவேயில்லை. பாவம், சாவித்திரி தான், நாங்கள் அவளை எங்கே அழைத்துக் கொண்டு போகிறோம் என்று கூடப் பாராமல் சாப்பிட்டுக் கொண்டே வந்தாள். அவள் கையும் வாயும் காலி ஆக ஆகநானும் ரவியும் போட்டி போட்டுக் கொண்டு அவள் கையில் பாப்கார்னைத் திணித்துக் கொண்டு வந்தோம். புராணா கிலாவினுள் நுழைந்ததும் சொல்லி வைத்தாற்போல் சிறிது தூரத்தில் ஓர் ஆசாமி தனது கைப்பையிலிருந்த சில்லறையை எண்ணியபடி நின்று கொண்டிருந்தான், வலது காலை ஒரு கல்லின் மேல் தூக்கி வைத்தபடி. நாங்கள் தயங்குவதைப் பார்த்து, அவனே முதல் கேள்வியைக் கேட்டான். எங்கள் பரபரப்பில் படபடவென்று எங்கள் எண்ணத்தை அவனிடம் வெளிப்படுத்திவிட்டோம். சாவித்திரி கடைசிப் பிடி பொரியையும் எண்ணி வாயில் திணித்துக் கொண்டிருந்தாள். ''எவ்வளவு காசு வேணும்?'' — அந்த ஆசாமியின் கட்டைக் குரல் கேட்டது. அவசரத்தில் ''இரண்டு ரூபாய்'' என்று ஒரே குரலில் நாங்கள் இரண்டு பேரும் கத்தியே விட்டோம். எங்களுக்கு அப்போ பணம் முக்கியமில்லை. அந்தச் சண்டைக்காரி சாவித்திரி தன் வாய் வரிசையை-அதுதான் அழுகையை-ஆரம்பிப்பதற்கு முன் அங்கிருந்து கிளம்பி விட வேண்டும். அவன் சில்லறையை எண்ணி எங்களிடம் கொடுத்தான். அவ்வளவுதான், சாவித்திரியின் முகத்தைத் திரும்பிக்கூடப் பாராமல் எடுத்தோம் ஓட்டம் அங்கிருந்து. இருந்தாலும் 'அண்ணா' என்று கத்தும் அவள் சத்தம் எதிரொலிக்கத்தான் செய்தது.

வீட்டுக்குள் நுழையும்போது ஹால் கடிகாரம் சரியாக பன்னிரண்டு அடித்துக் கொண்டிருந்தது. முன்கூட்டியே யோசித்து வைத்தபடி அப்பா—அம்மாவிடம் ஒப்பித்தோம். ''சாவித்திரியைக் காந்திமதி வீட்டில் விட்டிருக்கோம். சாயங்காலம் ஆளுடன் அனுப்பி வைப்பதாகக் காந்தியின் அம்மா சொன்னாள்.''


அம்மாவினுடைய ஸ்பெஷல் உருளைக் கிழங்கு வருவலும் வெஜிடபிள் ஸமோஸாவும் மண்ணாங்கட்டி போல் இருந்தன. ஏனோ பசியே இல்லை. விழுங்கவே முடியாமல் தொண்டையில் ஓர் அடைப்பு. சாவித்திரியின் குஞ்சுக் கையில் நெய் ஊற்றி விட்டுத்தான் எங்களுக்கு அம்மா ஊற்றுவாள். இன்றைக்கு அவள் கை இல்லை. எங்கள் கைகளும் நேரே முன்வர மறுத்தன.

ஏனோ, தானோ என்று சாப்பிட்டதாகப் பேர் பண்ணிவிட்டு எழுந்தோம். ஒரே அலுப்பு. இரவில் தூங்காதது, காலையிலிருந்து நடை, ஓட்டம், எல்லாம் சேர்ந்து எங்களைப் படுக்கையில் தள்ளிவிட்டன.

நாலு மணிக்குச் சாவித்திரியின் குரல் காதில் ஒலிக்க திடுக்கிட்டு எழுந்தேன். ரவியையும் உலுக்கி எழுப்பினேன். ஆம், கனவில் மட்டும் அல்ல. நினைவிலும் சாவித்திரியின் குரல் கேட்டது. எழுந்து, பதுங்கிப் பதுங்கி ஹாலுக்கு வந்தோம். அதோ, சாவித்திரி அப்பா மடியில் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறாள். அம்மா எதிர் ஸோபாவில். எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. தலை சுற்றியது. திடீர் என்று ஒரு குதூகலம். அருமைத்தங்கை ஆபத்து இல்லாமல் ஆத்துக்கு வந்து விட்டாளே என்று ஓடிப்போய் அவளை அணைத்துக் கொண்டேன்.

அப்புறம்தான் தெரியவந்தது — அந்த 'புராணா கிலா' பேர்வழி எங்கள் 'பிளானை' அறிந்து கொண்டு சாவித்திரி எந்த ரௌடி கையிலும் சிக்கிவிடக் கூடாதே என்ற நல்லெண்ணத்துடன் எங்களிடமிருந்து இரண்டு ரூபாய்க்கு அவளை வாங்கிக் கொண்டானாம். குழந்தை அரண்டு போகாமல், நல்லதனமாக அவளிடம் பேசி, அப்பா பெயர், இருப்பிடம், எல்லாம் தெரிந்து கொண்டு, கையுடன் அழைத்து வந்தானாம். அப்பா, அவனுடைய இரண்டு ரூபாயைத் திருப்பிக் கொடுத்து வெகுமதிகளுடன் அவனை அனுப்பி வைத்தாராம். எங்கள் மனத்திலிருந்து ஒரு பெரும் பாரம் இறங்கியது போல் இருந்தது.

அடுத்த ஞாயிற்றுக் கிழமை காலை அம்மா எங்களுக்கு வறுத்த கடலை கொடுத்து வெளியே அனுப்பினாள், இரவு டின்னர் பார்ட்டிக்கு நிம்மதியாகச் சமைக்கணும் என்று. சாவித்திரி ''அண்ணா, என்னைத் திரும்பவும் வித்துடப் போகிறையா?'' என்று விஷமச் சிரிப்புடன் கேட்டாளே பார்க்கணும்! வந்த கோபத்தில் நாங்கள் ஆளுக்கு ஒரு காதாகப் பிடித்துத் திருகலாம் என்பதற்குள் அவள் டக்கென்று குனிந்து எடுத்தாளே ஓட்டம்!




ஓட்டைக்குடை

மலைக் கழுகு போலே
மாட்டி யிருந்த குடையை
தலைக்கு மேலே தூக்கி
தட்டி விட்டுப் பார்த்தேன்.

விரித்துப் பார்த்த குடையில்
''வெள்ளி மீன்கள்'' நன்றாய்
அரித் திருந்த காட்சி
அற்புதக் காட்சி யடா!

நள்ளி ரவில் காணும்
நட்சத்திர வானம் போல்
உள்ளி ருந்து பார்த்தேன்
ஒருலட்சம் ஓட்டை யடா!

— ஆர். எஸ். மூர்த்தி



குண்டுப் பயல்

குண்டுப்பயல் சொம்புசொம்பக்
குறும்புத்தனம் பண்ணுறான்,
கண்டதையும் தூக்கிப்போட்டுக்
கலகலன்னு உடைக்கிறான்!

துண்டுதுண்டாய்ப் புத்தகத்தைக்
கிழித்துப்போட்டு நிற்கிறான்,
வண்டுபோலக் கண்ணுருட்டி
வாய்நிறையச் சிரிக்கிறான்!


பெஞ்சுமேலே ஏறிநின்று
பென்சிலாலே சுவரெல்லாம்,
கொஞ்சம்கூட இடமில்லாமல்
கிறுக்கிவைத்து ரசிக்கிறான்!


அண்ணன்மேலே ஆனையேறி
ஆடியாடி வருகிறான்,
மண்ணையள்ளி வாயில்மென்று,
மாமிபார்த்தால் துப்புறான்!

குஞ்சுத்தங்கை பேசச்சொல்லிக்
கிட்டநின்று கொஞ்சுறான்,
குஞ்சுபேச வில்லையென்றால்
கிள்ளிவிட்டு ஓடுறான்!

குண்டுப்பயல் சுட்டித்தனம்
கொஞ்சம்கூடத் தாங்காமல்
மண்டைவலி அம்மாவுக்கு
மருந்தும்போட வருகிறான்!

— 'சுப்ர. பாலன்'





அளக்க முடியாத அளப்புக்கள்



• வாண்டு •

நீண்ட நெடுங்காலத்துக்கு முன்னால் ஒரு ராஜா இருந்தார். அவர் மிகவும் கொடுமையானவர். பல போர்களில் வெற்றி கண்ட அவருக்குச் சண்டையில் அலுப்பு ஏற்பட்டது. ஆகவே, தம்மை மகிழ்விக்கும்படியான கதை சொல்லக் கூடியவர்களை வரவேற்றார் மன்னர்.

ஆனால் அவர் எதிர்பார்த்தது எப்படிப்பட்ட கதைகளைத் தெரியுமா ?

'நாட்டின் எந்த மூலையிலிருந்தும் யாரும் என் அவைக்கு வந்து கதை கூறலாம். ஆனால் அவர்கள் கூறும் கதைகள் வெறும் அளப்புக்களாக இருக்க வேண்டும். உண்மையே அதில் துளிக்கூட இருக்கக் கூடாது. இப்படி நம்ப முடியாத நாற்பது விதமான பெரும் பொய்களை, யார் கூறுகிறார்களோ அவர் தனுக்கு ஒரு பை நிறைய பொற் காசு கரப்படும். அவர் கூறும் கதையில் — நடக்கக்கூடிய செயல் ஒன்றே ஒன்று இருந்தாலும் அவர்கள் நகருக்கு வெளியே கோட்டை வாசலில் தூக்கிவிடப்படுவார்கள்' என்று அறிவித்தார் மன்னர்.

மன்னரின் இத்தகைய அறிவிப்பைக் கேட்டதும் 'பொய்யான செய்திகளைப் புனைந்து கதை கூறுவது என்ன கஷ்டமான காரியமா ?' என்று எண்ணி நாட்டின் பல பாகங்களிலிருந்தும் கதை சொல்லப் பலர் வந்தார்கள். அப்படி வந்தவர்களுக்கு கதை கூற ஆரம்பித்த பிறகுதான் அண்டப் புளுகு ஆகாசப் புளுகு கூறுவது சுலபமல்ல என்பது புரிந்தது. அத்தனைபேரும் அரசரின் நிபந்தனைப்படி பத்துப் பொய்களுக்கு மேல் கற்பனை செய்ய முடியாதவர்களாகித் தங்கள் உயிரைப் பறி கொடுத்ததுதான் மிச்சம். அதன் பிறகு தங்கள் உயிரைப் பணயம் வைத்துக் கதை கூற யாருமே வரவில்லை.

ஒரு நாள் அரண்மனைக் கதவு தட்டப்பட்டது. காவல்காரர் திட்டி வாசலைத் திறந்து பார்த்தார். வெளியில் ஒரு சின்னப்பையன் நின்று கொண்டிருந்தான். அழுக்கேறிய கந்தலாடை, வெறுங் கால், புழுதி படிந்த உடல். "என்ன வேண்டும், எதற்காக வந்திருக்கிறாய்?" என்று கேட்டான் காவலாளி.

"அரசருக்குக் கதை கூற வந்திருக்கிறேன்" என்றான் சிறுவன்.

"போ, போ...! கதை சொல்ல வந்தவர்களின் கதி என்ன என்று தெரியுமா உனக்கு? உன் தலை உடலில் இருப்பது பிடிக்கவில்லையா உனக்கு?" என்று விரட்டினான் காவல்காரன்.

எத்தனை சொல்லியும் கேட்காத அந்தப் பையன் கடைசியில் மன்னர் முன் கொண்டு போய் நிறுத்தப்பட்டான்.

மன்னர் பட்டு மஞ்சத்திலே சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தார். தம் முன்னால் ஒரு பையன் கந்தலாடையுடன் நிற்பதைக் கண்ட மன்னர். "யார் நீ ? இங்கு ஏன் வந்தாய்?" என்று இடி போன்ற குரலில் கேட்டார்.


"மன்னர் மன்னவா ! உங்களுக்கு அற்புதமான அண்டப்புளுகு நாற்பது கொண்ட கதையைக் கூற வந்திருக்கிறேன்" என்றான் பையன்.

மன்னர் அந்தப் பையனை நன்றாகப் பார்த்தார். அவர் கண்கள் கோபத்தினால் பளபளத்தன. "முட்டாளே, உன் உயிர் மீது உனக்கு ஆசை இல்லையா?" என்றார்.

"அதைவிடத் தாங்கள் கொடுக்கப் போகும் பொற்காசு மூட்டையின் மீது எனக்கு நாட்டம்" என்றான் பையன்.

அவனுடைய துணிச்சலான பதிலினால் ஒரு விநாடி திகைத்த அரசர், "அப்படியா, உன் கதையை ஆரம்பிக்கலாம்? நான் கேட்கிறேன்" என்று திண்டில் என்னும் வசதியாகச் சாய்ந்து அமர்ந்து கொண்டார். பையன் தன் அளப்புக்களை அவிழ்த்துவிடலானான்.

இப்போது நான் சொல்லப் போகும் கதை ரொம்ப ரொம்ப நாட்களுக்கு முன்னாலே நடந்தது. அப்போது வானம் என்பது உங்கள் குதிரையின் முதுகிலே போடப்பட்டுள்ள சேணத்தின் அளவே போன்றிருந்த காலம். பூமியோ அந்தக் குதிரையின் குளம்பளவுதான் இருந்-





தது. நான் அப்போது பிறக்கவே இல்லை. என் தாத்தாவின் குதிரைகளை மேய்த்துக் காலம் கழித்து வந்தேன்.

நல்ல கோடையில் ஒரு நாள் குதிரைகளுக்கு நீர் காட்ட நதிக்கரைக்கு ஓட்டிப் போனேன். அங்கு போன போது ஆற்று நீர் உரைந்து கிடந்தது. என்னிடம் இருந்த கோடாலியால் உரைந்து கிடந்த ஆற்றில் ஒரு துவாரம் செய்ய முயன்றேன். ஆனால் என் கோடரியால் அந்தப் பனிப் பாறையில் ஒரு சின்ன விரிசலை மட்டுமே உண்டாக்க முடிந்தது. சட்டென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. என் தலையைக் கிள்ளி எடுத்து அதைக் கொண்டு என் நெற்றியினால் பனிக் கட்டி மீது மோதினேன். என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்? பனிப் பாளம் பிளந்து பொடியாகி அதனடியில் ஓடிக் கொண்டிருந்த நீரில் என் நூறு குதிரைகளின் தாகத்தைத் தணித்தேன்.


குதிரைகள் வயிறு முட்ட நீர் அருந்தியதும் பனிக் கட்டி மீது புல் மேயத் தொடங்கின. அப்போதுதான் புள்ளிகளோடு கூடிய என் அருமைக் குதிரையைக் காணவில்லை என்பதை உணர்ந்தேன்.

குதிரைகளை மேய்க்கப் பயன்படும் கோலை பூமியில் ஊன்றி அதன் உச்சியில் ஏறி நின்று காணாமல் போன என் குதிரையைத் தேடலானேன். கண்ணுக்கு எட்டிய வரை பார்த்தேன். எதையும் காணவில்லை. கோலின் உச்சியில் என் கத்தியைக் குத்தி அதன் மீது ஏறிப் பார்த்தேன். அப்போதும் எதுவும் தென்படவில்லை. மனச் சோர்வுடன் கத்தியின் கைப் பிடியில் ஓர் ஊசியைக் குத்தி நிறுத்தி அதன் கண்வழியாக உற்று நோக்கினேன். அப்போதுதான் என் அருமைக் குதிரை இருக்கும் இடம் தெரிந்தது. கடலின் நடுவே உயர்ந்து நின்றதொரு செங்குத்தான பாறை மீது என் குதிரை நின்று கொண்டிருந்தது. அதன் குட்டி கடல் நீரில் துள்ளிக் குதித்தபடி தன் தாயை நோக்கி நீந்திக் கொண்டிருந்தது.

உடனே நான் என்னுடைய மேய்ச்சல் தடியைப் படகாகவும், கத்தியைத் துடுப்பாகவும் மாற்றிக்கொண்டு என் குதிரையைக் கொண்டு வரக் கிளம்பினேன். ஆனால் நடுக் கடலை அடைந்த போது மூழ்க ஆரம்பித்தேன். சட்டென்று கத்தியோடு கடலில் குதித்தேன், கைத் தடியைக் கட்டுமரமாக்கிக்கொண்டு நீந்தினேன். மூன்று கைவீச்சிலே கடலின் மறு கரையை அடைந்து விட்டேன்.

என்னிடமிருந்த கயிற்றிலே சுருக்குப் போட்டு





அதைக் குதிரையை நோக்கி வீசி அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டேன். குட்டியையும் எனக்கு முன்னால் குதிரையின் முதுகில் தூக்கி வைத்துக் கொண்டேன். மறுபடியும் கடலில் குதிரையோடு குதித்தேன், மறு கரையை அடைய. அலைகளின் மீதாக ஆனந்தமாகப் பாடியபடி சென்று கொண்டிருந்தபோது திடீரென்று என் குதிரை கடலிலிருந்த ஒரு பாறையில் மோதவே நான் மறுபடியும் கடலில் விழுந்தேன். மூழ்கும் நிலை.

அந்த வேளையில் நான் என்ன செய்திருப்பேன், சொல்லுங்கள்? சட்டென்று குதிரைக் குட்டியின் முதுகில் தாவி ஏறினேன். குதிரையைத் தூக்கி அதன் முதுகில் எனக்கு முன்னால் வைத்துக் கொண்டேன். அடுத்த விநாடி அக்கரையும் அடைந்துவிட்டேன். என்னுடைய மற்ற குதிரைகளை விட்டு வந்த இடத்துக்குப் போன போது குதிரைகள் எல்லாம் அடர்ந்த புதர்வெளியில் ஆனந்தமாக மேய்ந்து கொண்டிருந்தன. என் குதிரையை ஒரு பெரிய புதரில் கட்டும் போது ஒரு முயல் என் காலடியிலிருந்து தாவி ஓடியது. ஓடிக் கொண்டிருக்கும் போதே வில்லிலே அம்பை வைத்து முயல் மீது எய்தேன். அம்பு முயலின் மார்பில் பாய்ந்தாலும் தைக்காமல் அதன் உடலிலிருந்து பந்து போல வெளியேறியது. இன்னோர் அம்பை எடுத்து அதன் கூர் முனையைத் திருப்பி வைத்து முயலின் மீது விட்டேன். அதுவும் அப்படியே திரும்பி வந்தது.

முயலின் தோலை உரித்து அதன் மாமிசத்திலிருந்து கொழுப்பைத் தனியே பிரித்து எடுத்தேன். பிறகு தீ மூட்டக் காய்ந்த கட்டைகளைச் சேகரிக்கும் போது என் குதிரையின் குளம்பொலியைக் கேட்டேன். பயத்தினால் அது தன் கால்களைத் தரையில் அடித்திருக்கிறது. திரும்பிப் பார்த்தபோது குதிரை ஆகாயத்தில் எழும்பத் தயாராகிக் கொண்டிருந்தது. நான் புதர் என்று அதைக் கட்டியது புதரல்ல. தவறுதலாக அன்னப் பறவையின் கழுத்தில் குதிரையைக் கட்டி இருக்கிறேன் !

சேகரித்த சுள்ளிகளைக் கீழே போட்டுவிட்டுக் குதிரையின் கட்டுக்களை அவிழ்க்க ஓடினேன். என்ன ஆச்சரியம்! சுள்ளிகள் சிறகு விரித்து ஆகாயத்தில் பறக்கலாயின. நான் சேகரித்தவை

காய்ந்த விறகுக் குச்சிகள் அல்ல.......
காடை என்ற பறவைகளே!

எப்படியோ ஒரு வழியாக நெருப்பு மூட்டி, முயல் கொழுப்பை மூக்குள்ள ஆனால் அதில் துவாரம் இல்லாத பாத்திரத்திலிட்டு நெருப்பின் மீது வைத்தேன். ஆனாலும் கொழுப்பு பாத்திரத்திலிருந்து ஒழுகிக் கொண்டிருந்தது. ஏராளமான துவாரங்கள் உள்ள இன்னொரு பாத்திரத்துக்கு அதை மாற்றி அடுப்பின் மீது வைத்தேன். இப்போது அதிலிருந்து ஒரு சொட்டுக்கூட ஒழுகவில்லை. அதைக் காய்ச்சி எண்ணெயாக்கி, கன்றுக் குட்டியின் குடலில் தயாரித்த பைக்குள் அதைச் சுடச்சுட ஊற்றிக் கொண்டேன்.

பிறகு முயல் மாமிசத்தைத் தீயில் பக்குவம் செய்து உண்ணப் போகும் போதுதான் எனக்குத் தலை இல்லாததும் பனிக் கட்டியில் துளை போட்டேனே அந்த இடத்திலேயே என் தலையை விட்டு வந்துவிட்டேன் என்பதும் நினைவுக்கு வந்தது.

விக்கி விக்கி அழ வேண்டும் போல் இருந்தது. ஆனால் வாய் தலையில் அல்லவா இருந்தது? என்ன செய்வது என்று யோசிக்கவே இல்லை. இறைச்சியைத் தொண்டை வழியாகவே திணித்துச் சாப்பிட்டேன். வயிறு நிறைந்ததும் முயல் எண்ணெயினால் காலணியைப் பதப்படுத்தலாம் என்று நினைத்து செருப்புக்கு எண்ணெய் போடலானேன். ஒரு செருப்புக்குத்தான் அந்த எண்ணெய் போதுமானதாக இருந்தது.

உண்ட களைப்பில் சிறிது தூங்கலானேன்? திடீரென்று பெரிய சத்தம் கேட்டு எழுந்தேன். கூச்சல், அடி உதை—யாரோ இருவர் சண்டை போடுவது போல் இருந்தது. கண் விழித்துப் பார்த்த போது கண்ட காட்சி என்ன தெரியுமா? என் இரு காலணிகளும் சண்டை யிட்டுக் கொண்டிருந்தன.

''இந்தா, வாங்கிக்கோ. இதையும் வாங்கிக்கோ. எஜமானர் எனக்கு ஒரு சொட்டு எண்ணெய்கூடப் போடவில்லையே!'' என்று ஒரு செருப்பு மற்றதைக் குத்து குத்தென்று குத்திக் கொண்டிருந்தது. காலணிகளை விலக்கி விட்டேன். ''கோபப்படாதீர்கள், துரதிர்ஷ்டசாலிகளான உங்களுக்கு என்னால் உதவ முடியாது'' என்று சமாதானப்படுத்தினேன். ஒரு காலணியை இடப் பக்கமும் மற்றதை வலப் பக்கமும் அருகில் போட்டுக் கொண்டு தூங்கிப் போனேன். காலையில் எழுந்திருந்த போது எண்ணெய் காணாத காலணியைக் காணவில்லை. மீதமிருந்த ஒரு காலணிக்குள் என் இரு கால்களையும் நுழைத்துக் கொண்டு காணாமல் போன செருப்பைத் தேடி நான் ஓடலானேன். ஓய்வே இல்லாமல் ஒரு நாள் ஒரு மாதம், ஒரு வருஷம் வரை இப்படி அதைத் தேடி ஓடிக் கொண்டே இருந்தேன்.

கடைசியாக ஒரு கிராமத்தை அடைந்த போது அங்கு ஒரு பெரிய விருந்து நடந்து கொண்டிருந்தது. உணவு வகைகளைத் தட்டில் வைத்து எல்லாருக்கும் வழங்கிக் கொண்டிருந்தார்கள். இப்படிப் பரிமாறப்படும் உணவுத் தட்டுக்காகக் காத்துக்கொண்டிருந்தவர்களில் என்னுடைய ஓடிப் போன காலணியும் ஒன்றாக இருப்பதைக் கண்டேன்.

வியப்புடன் அதைக் கூப்பிட்டேன்.

என் குரலைக் கேட்ட அது என் அருகில் வந்தது. அப்போது அதன் கையில் ஓர் உணவுத் தட்டு இருந்தது. ஓடிப் போனதற்காக நான் கோபித்துக் கொள்ளுவேனோ என்ற பயத்தில் அது தன் கையிலிருந்த தட்டை நழுவவிட்டது. அது மட்டுமல்ல, என் கோபத்தைத் தணிக்க எனக்கு ஐந்து உணவுத் தட்டுக்களை வாங்கிக் கொடுத்து உபசரித்தது.

அத்தனை உணவுகளையும் தொண்டைக் குழி வழியாக உள்ளே தள்ள முடியாதல்லவா? ஆகவே, என்னுடைய இன்னொரு காலணியை விரட்டினேன், என் தலையைக் கொண்டு வரும்படி. தலையும் வந்தது. அதைக் கழுத்தில் பொருத்திக் கொண்டு உணவை வாய் வழியாக ரசித்துச் சாப்பிட்டேன்.

பிறகு இரு காலணிகளையும்அணிந்து கொண்டு என் குதிரைகள் இருக்கும் இடத்துக்குத் திரும்பினேன். வயிறு முட்டச் சாப்பிட்டதும், பகல் போதின் வெப்பமும் சேர்ந்து எனக்குத் தாங்க முடியாத தாகம் எடுத்தது. பனிக் கட்டியில் துவாரம் செய்திருந்தேனல்லவா? அதனுள்ளிருந்து தண்ணீர் குடித்தேன். தாகம் தீர நீர் குடித்ததும் நிமிர நினைத்த போது முடியவில்லை. காரணம் புரியவில்லை. உற்று கவனித்தபோது தான் நான் குனிந்து நீர் அருந்தும் போது என் மீசையில் சிக்கிய அறுபது பெண் வாத்துக்களும் எழுபது ஆண் வாத்துக்களும் அப்படியே உறைந்து போயிருக்கின்றன. அவற்றின் கனத்தினால்தான் என்னால் நிமிர முடியவில்லை.

இத்தனை வாத்துக்களையும் வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது? ஆகவே, எல்லா வாத்துக்களையும் ஒரு சாக்கில் போட்டுக் கொண்டு போய் விற்று அத்தனைக்கும் பதிலாக ஒரு கொக்கை வாங்கிக் கொண்டேன். மன்னர் மன்னவா, இந்தக் கொக்கைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா? அது அரபு நாட்டு ஒட்டகத்தைவிடப் பெரியது. அதன் அலகோ; மிக மிக ஆழமான கிணற்றிலிருந்தும் தன் உடலை வளைக்காமல் நீர் அருந்துமளவுக்கு அத்தனை நீளமானது'' என்றான் கதை சொல்லும் பையன்.

'' ஒரு வேளை அந்தக் கிணறு ஆழம் இல்லாததாக இருக்கலாம்'' என்றார் அரசர்.

''இருக்கலாம். ஏனென்றால் அதற்குள் காலையில் ஒரு கல்லை வீசினீர்களானால் அது மாலையில்தான் அதன் அடியில் போய் விழும்.''

''அப்படியானால் பகல் போதின் நேரம் குறைவாக இருக்குமோ? என்னவோ?''


''உண்மைதான் ஏனென்றால் ஒரு மந்தையில் உள்ள ஆடுகள் பூமியின் ஒரு கோடியிலிருந்து மறு கோடியை ஒரே நாளில் கடந்துவிடுகின்றன.''

கதை கேட்ட மன்னர் அதற்குமேல் பதில் கூற முடியாமல் உதட்டைக் கடித்துக் கொண்டார்.

கதை சொன்ன பையன் அதை முடித்தான். ''மன்னாதி மன்னா! இப்போது நான் கூறியவைகள் எல்லாம் என் வாழ்க்கையில் நடந்தவைகள். ஆனால் மற்றவர்கள் வாழ்க்கையில் நடந்தவைகளையெல்லாம் நான் கேள்விபட்டபடி கூற ஆரம்பித்தேனானால் அதை முடிக்குமுன் நான் கிழவனாகிப் போவேன்.''

மன்னர் இது போன்ற புளுகு மூட்டைகளை அது வரை கேட்ட இல்லை என்பதை ஒப்புக் கொண்டு சிறுவனுக்குப் பொற்காசு மூட்டையைப் பரிசாகக் கொடுக்கும்படி ஆணையிட்டார். ஆனால் மிகக் குரூரமான மன்னராதலால் தாம் தோல்வியடைந்ததை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஆத்திரமும் கோபமும் அவரை மூன்றே நாட்களில் கொன்றுவிட்டன.

கதை சொன்ன பையன் ரொம்ப காலம் வாழ்ந்தான். தன் பேரப் பிள்ளைகளுக்கெல்லாம் இப்படிப் பல அளப்பரிய அளப்புக் கதைகளைக் கூறி மகிழ்வித்தான்.



"இன்னிக்கு நம்ம பையனுக்கு ரன்னிங் ரேஸிலே வெள்ளிக்கோப்பை கெடச்சிருக்கு, தெரியுமா?"

"அவனுக்குப் பரிசு கிடைக்கும்னு எனக்கு முன்னமேயே தெரியும்!"

"எப்படி...?"


"அவன் பள்ளிக்கூடம் விட்டதும் வீட்டுக்கு ஓடி வரும் வேகத்தைப் பார்த்திருக்கிறேன்."



"உங்க கடையிலே ஞானப்பழம் இருக்கா?"


—எஸ். எஸ். கணேசன்

சிரிக்கச் சிரிக்க!



"ஆகா! நம் நாட்டிலே பாலும் தேனுமா ஓடினா எப்படி இருக்கும்!"

"ஒரே ஈயும் எறும்புமா இருக்கும்!"



"கழுதைக்கு எத்தனை கால்?"

"இரண்டு கால்கள்."

"எப்படி...?"

"எங்கப்பா என்னை 'கழுதை'ன்னு தானே கூப்பிடுறாங்க."

—நாகுரா



—சாயிநாத்



அவன்: நான் சரியாகப் படிக்காததினால் எங்க அப்பா என்னை நாளைக்குத் தண்ணி தெளிச்சு விட்டுப் போறாரும்.

மற்றவன்: ஏன், அதை இன்னிக்கே செய்யலாமே!

அவன்: எங்க வீட்டுக் குழாயிலே இன்னிக்குத் தண்ணி வராது; நாளைக்குத்தான் வரும்.



சிங்கம்

மிருகங்களைப் பற்றி

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னை மாநகராட்சியினர் "The Zoo Guide" என்ற புத்தகத்தினை வெளியிட்டிருக்கின்றனர். 1951ம் ஆண்டில் சென்னை மிருகக்காட்சிச் சாலையிலிருந்த பலவேறு மிருகங்கள், பறவைகளைப் பற்றிய பல அபூர்வ விஷயங்கள் அப்புத்தகத்திலிருக்கின்றன.

மிருகங்களுக்கு 'ராஜா' சிங்கம் தானே! சிங்கத்தின் பூர்வீகப் பிறப்பிடம் ஆப்பிரிக்காதான் என்றாலும் இந்தியாவில் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள "கிர்" காடுகளில் அவை அதிகம் காணப்படுகின்றன. மிருகங்களில் அதிகமான சக்தி வாய்ந்தது சிங்கமே. சிங்கம் தன் கால்களால் ஒரு குதிரையை அடித்தால் அடுத்த விநாடி அக்குதிரையின் முதுகெலும்பே உடைந்து விடுமாம். அத்துட வில்லை. எலியைப் பூனை எப்படிச் சர்வ சாதாரணமாகத் தூக்கிச் செல்கிறதோ அப்படி ஒரு பெரிய எருதினைக் கொன்று எளிதில் தூக்கிச் செல்லவும் வல்லதாம் சிங்கம். இப்போது சென்னை மிருகக்காட்சிச் சாலையில் இந்தியச் சிங்கங்கள் மூன்றும், ஆப்பிரிக்கச் சிங்கங்கள் ஐந்தும் உள்ளன. தினமும் சிங்கங்களுக்கு அவைகளின் வயதுக்கு ஏற்றபடி பத்து முதல் பதின் மூன்று கிலோ எடையுள்ள மாட்டுக் கறியினை உணவாகப் போடுகிறார்களாம். சிங்கம் சாதாரணமாகப் பதினெட்டு முதல் முப்பது வருடங்கள் வரை உயிர் வாழும். மணிக்கு ஐம்பது மைல்கள் வரைவேகமாக ஓடவும் சிங்கத்தினால் முடியுமாம் !

புலி

இந்தியா, பர்மா, ஜாவா, சுமத்ரா முதலிய ஆசிய நாடுகளில் காணப்படும் மிருகம் இது. இலங்கைத் தீவில் புலிகளே கிடையாதாம்! காடுகளில் நெருக்கமான மரங்களுக்கிடையேமறைந்து வாழும் புலி பகல் நேரத்தில் அநேகமாக வெளியே தலை காட்டாது. இரவு நேரங்களில் இரை தேடி அது பல மைல்கள் தூரம் அலையவும் தயங்காது. புலிக்கு மிகவும் பிடித்தமான உணவு மானே! அடுத்ததாகக் காட்டுப்பன்றி, ஆடு மாடுகள்.

சென்னை மிருகக் காட்சிச் சாலையில் இப்போது ஒரு ஜோடி புலியும் அதற்கு மூன்று குட்டிகளும் உள்ளன. இதைத் தவிர சிறுத்தைப் புலிகள் ஏழும் உள்ளன.

புலி சாதாரணமாக மனிதர்களைக் கண்டு மிகவும் பயப்படும்! ஆனால் தனக்கு எந்த உணவும் கிடைக்காத நேரங்களில் மனிதனைக் கொன்று புசிக்கும்! புலி ஆயுதமில்லாத மனிதனைச் சந்திக்கும் போது எதிர்ப்பை இருப்ப

இவையெல்லாம் எதைக் குறிப்பவை

ஃபெலிஸ் பார்டஸ் (Felis pardus), எகஸ் பர்சலி, (Equs burchelli), ஃபெலிஸ் லியோ (Felis leo), ஹிஸ்ட்ரிக்ஸ் லுகுரா (Hystrix leucura), செர்வஸ் ஆக்ஸிஸ் (Cervus axis), சிக்னஸ் ஒலார் (Cygnus olor), சிக்னஸ் அட்ராடஸ் (Cygnus atratus) சிக்கோனியா ஆல்பா. (Ciconia alba).

இவை முறையே வேங்கை, வரிக்குதிரை, சிங்கம், முள்ளம்பன்றி, புள்ளி மான், வெள்ளை அன்னம், நாரை ஆகியவற்றைக் குறிக்கும் உயிரியல் பெயர்கள்



தில்லை. காரணம்? புலியை எதிரில் கண்டவுடனேயே மனிதனின் உயிரில் பாதி போய் விடுகிறதே!


புலி அதிகமாக சப்தம் போடாது. காட்டில் உள்ள புலி தனது சகாக்களுடன் இரை தேடிச் செல்லவும் தனது துணையைத் தேடிக் கூப்பிடவும், ஆத்திரத்துடன் சப்தம் போடவும் தனித் தனியான பாஷைகள் உண்டாம். வேட்டைக்காரர்களுக்கு இந்தப் பாஷை நன்கு புரியும்! புலியின் ஆயுள் பன்னிரண்டு முதல் இருபத்தோரு வயது வரை. வேகம் மணிக்கு எழுபது மைல்கள் வரை! புலி தினமும் குளிக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

கரடி

இந்தியா முழுவதிலும் உள்ள மலைப் பிரதேசங்களில் ஏராளமாக வாழ்வது கரடி! பூக்கள், பழங்கள், தேன் முதலியனவும் கரையான்கள் போன்ற சில பூச்சிகளுமே இதன் ஆகாரம்! சென்னை மிருகக் காட்சிச் சாலையில் இரண்டு ஜோடிக் கரடிகள் இன்று தனிக் குடித்தனம் நடத்துகின்றன. எதிரியைத் தாக்கக் கரடியின் கால்களில் நீளமான நகரங்கள் உண்டு. கரடி மரங்களில் வேகமாக ஏறும். சென்னை மிருகக் காட்சிச் சாலையில் கரடிகளுக்கு ரொட்டியும் பாலும் கொடுக்கிறார்கள். பழக்குவது சுலபமாதலால் கரடியைக் காடுகளிலிருந்து பிடித்து வந்து அதற்கு நடனமாடச் சொல்லிக் கொடுத்து வட நாட்டில் சிலர் அதை வைத்தே பிழைப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்குமே!

முதலை


பெரிய ஆறுகளில் உதாரணமாக கோதாவரி, கங்கையில் மட்டுமே முதலைகள் நிறைய வசிக்கின்றன. முதலையின் பலம் அதன் வாலில்தான்! ஆற்றின் கரையில் பதுங்கியிருந்து கால் நடைகளையும் மனிதனையும் அது நீருக்குள் இழுத்துச் சென்று விடும். நீண்ட வாலினாலும் பெரிய கூரிய பற்களாலும் ஒரு கரடியையோ அல்லது புலியையோ கூட அவை தண்ணீரின் அருகே நீர் அருந்த வரும்போது முதலைகள் இழுத்துச் சென்று கொன்று விடுமாம்!



கங்கை நதியில் காணப்படும் முதலைகள் கிட்டத்தட்ட முப்பது அடி நீளம்கூட இருக்குமாம். பொதுவாக முதலைகள் மீனையே விரும்பிப் புசிக்கும். நைல் நதியில் உள்ள முதலைகளும், உப்புத் தண்ணீரில் வாழும் முதலைகளுமே மனிதனை அடித்துக் கொல்லும்!

கராச்சியில் சில முதலைகளைத் தெய்வமாக மதித்து அவற்றுக்குக் கைகளினால் உணவு ஊட்டுகிறார்களாம்!


தொகுப்பு: மன்னை சௌரிராசன்




வேகம் என்ன?	மணிக்கு மைலில்
நத்தை	0.009
ஆமை	0.03
ஒட்டகம்	10
யானை	25
காண்டாமிருகம்	28
ஒட்டைச்சிவிங்கி	32
வேட்டை நாய்	36
ஓநாய்	36
வரிக் குதிரை	40
கங்காரு	45
சிறுத்தைப் புலி	70

நந்து சுந்து மந்து ③

கதை: வாண்டு மாமா
சித்திரம்: செல்லம்




மந்து ஜன்னலிலிருந்து தாவியது மேஜைக் கண்ணாடி மீது. மந்துவின் கனம் தாளாத அது உருளவே அதன் முன்னாலிருந்த பொருள்கள் விசிறி எழ...
ஏய்...ஏய்! இதென்ன ரகளை இங்கே...!
அயோக்கியப் பயல்களா! உள்ளே புகுந்து திருடவா வந்தீங்க?
திருட்டுப் பசங்களா! தப்பிட்டாங்களே! விடக்கூடாது!
ஐயோ! கைப் பிடிக்கட்டையிலே உட்கார்ந்தது தப்பாகப் போச்சு. என்னமா சறுக்கிண்டு போறது? அம்மாடி....!
மந்து சறுக்கியபடி வந்த வேகத்தில் அதன் முடிவிலிருந்த குண்டு பெயர்ந்து ஒருவன் தலையைப் பதம் பார்க்க மந்து மற்றவன் மேல் விழ...
...ம்மாடி யோ....வ்!
மந்துவை வாயத்திலே கட்டினதும் நல்லதாப் போச்சு. இல்லேன்னா இந்தத் திருடர்களிடம் நாம் ஏமாந்திருப்போம்
திருடர்களைப் பிடித்துக் கொடுத்ததுக்கு தான் மந்துவுக்கு விசேஷமான விருந்தும் படுக்கையும்!

மருத்துவம் பிறந்த கதை — 3

ரோமானியர்கள் காலத்தில்

'கெளசிகன்'



ஹிப்போகிரேட்ஸுக்கு முன்பு கிரேக்க மருத்துவம் மந்திரங்களையும், மூட நம்பிக்கைகளையும் மதச் சடங்குகளையும் அடிப்படையாகக் கொண்டிருந்தது. சில வியாதிகள் மனிதர்கள் மீது கோபம் கொண்ட கடவுள்கள் வழங்கும் தண்டனைகள் என்று நம்பப்பட்டு வந்தன. ஹிப்போகிரேட்ஸ் இவைகளையெல்லாம் அடியோடு மறுத்தார். தம் வாழ்நாள் முழுவதும் மனிதனுக்கு வரும் நோய்களெல்லாம் இயற்கையாக வருபவை, இயற்கைக்கு மாறுபட்ட காரணங்களில் ஏற்படுபவையல்ல என்று போதித்தார். இவரது இந்த இன்றைய நோக்கை நவீன மருத்துவம் உண்மை என்று நிரூபித்து வருகிறது.

ஒரு வைத்தியர் எப்போதும் தம் நோயாளியை நுணுக்கமாக ஆராய வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு நோயின் தோற்றத்தையும் அதன் செயல் முறைகளையும் தெரிந்து கொள்ள முடியும். — இது ஹிப்போகிரேட்ஸ் இன்றைய வைத்தியத் துறைக்கு அளித்துள்ள பயனுள்ள பல போதனைகளில் ஒன்று. இந்த முறையினால் ஒரு வைத்தியர் ஒவ்வொரு நோயின் வளர்ச்சியையும் அறிய முடிகிறது. அதனால் அதேபோன்ற நோய் இன்னொருவருக்கு வரும்போது அதன் தன்மையை முன்கூட்டியே அறிந்து எச்சரிக்கையாகச் சிகிச்சை செய்ய உதவியாக இருக்கும்.

ஹிப்போகிரேட்ஸ் எளிமையான மிகச் சில மருந்துகளையே தமது சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தினர். ஒரு மனிதனுக்கு வரும் நோயை அவனது உடலே சரிப்படுத்திக் கொள்ளும் என்ற நம்பிக்கை உடையவர் இவர். 'இயற்கை வைத்தியம்' என்று இதை அவர் கூறினார். உணவு, சுத்தமான காற்று, விசேஷமான உடற்பயிற்சிகள் ஆகியவை இவருடைய இயற்கை வைத்தியத்தின் மருந்துகள். நோயுற்றவர்களுக்கு ஹிப்போகிரேட்ஸினுடைய ஆகார முறைகள் மிகவும் கடுமையானவை. பார்லிக் குறுணைக் கஞ்சி ஒரு வகை உணவு. (நம் நாட்டு வைத்தியத் துறையில் புழுங்கல் அரிசிக் கஞ்சி கொடுக்கும்படி வைத்தியர்கள் குறிப்பிடுவது நினைவுக்கு வருகிறதில்லையா!) பார்லிக் குறுணைக் கஞ்சியிலே தேனையும் நீரையும் அல்லது தேனையும் வினிகரையும் கலந்து சாப்பிடச் சொல்லுவார்.

ஹிப்போகிரேட்ஸும், அவர் வழி வந்தவர்களும் சில வகைத் தண்ணீர் மனித ஆரோக்கியத்துக்கு ஏற்றதல்ல என்று கருதினர்கள். சில நோய்கள் சில நாடுகளில் கடுமையான தன்மையனவாக இருப்பதையும் கண்டு பிடித்தார்கள். இதற்குப் பருவ நிலையே காரணம் என்றும் கூறினர்கள்.

ஹிப்போகிரேட்ஸ் வெறும் மருத்துவர் மட்டுமல்ல. ரண சிகிச்சையிலும் வல்லுநராக இருந்தார். எலும்பு முறிவு, மூட்டு நழுவல்; கட்டி, பிளவைகளை வெட்டி எடுத்தல் ஆகிய ரண சிகிச்சைகளையும் திறம்படச் செய்தார். ரண சிகிச்சை சம்பந்தமான அவருடைய அறிவுரைகள் இன்றைக்கும் வைத்தியர்களுக்குப் பொருந்துவனவாக உள்ளன.

கைவிரல்களின் நகங்கள் மிக நீளமாகவோ அல்லது விரல் நீளத்துக்கு உள்ளடங்கி மிகவும் குட்டையாகவோ இருக்கக் கூடாது. இரு கைகளாலும் எல்லாக் காரியங்களையும் செய்யக் கற்றிருக்க வேண்டும். செய்யும் காரியத்தைத் திருத்தமாகவும், நேர்த்தியாகவும் விரைவாகவும், சுத்தமாகவும், முறையாகவும் செய்ய வேண்டும்.

பண்டைய நாட்களில் உலகில் கிரேக்க தேசத்தில் மட்டுமே மருத்துவக் கலை வளர்ந்து வந்தது என்று சொல்ல முடியாது. எகிப்தில் உள்ள அலெக்ஸாந்திரியாவில் ஒரு மருத்துவக் கல்லூரியே வளர்ந்து கொண்டிருந்தது. மருத்துவத்தின் பல சாதனைகளைப் பற்றிய

செய்திகளும் முறைகளும் அங்கு சேகரிக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. அங்கிருந் தவைகளில் சில ஹிப்போகிரேட்ஸ் தொகுப்பு என்று பெயர் பெற்றது. இப்படிப்பட்ட தொகுப்புக்களில் மொத்தம் 70லிருந்து 100 வரை இருக்கும். இவை யெல்லாம் காஸ் நகரத்து மருத்துவர்களின் வைத்தியக் குறிப்புகள். இந்த ஹிப்போகிரேட்ஸ் தொகுப்பு என்ற புத்தகங்களில் ஒரு முக்கியமான புத்தகத்தின் பெயர் புனிதமான வியாதி (The sacred disease) என்பது. இந்தப் புத்தகம் அநேகமாக கி. மு. 400ல் எழுதப்பட்டிருக்க வேண்டும். இன்று நாம் கூறும் காக்காய் வலிப்பு என்ற நோயைப் பற்றி அது கூறுகிறது. அந்தக் காலத்தில் இந்த வியாதி கோபம் கொண்ட கடவுளர்களின் தண்டனையாகக் கருதப்பட்டதினுல் இதற்குப் புனிதமான வியாதி என்று பெயர் ஏற்பட்டிருக்கிறது. இந்தப் புத்தகத்தை எழுதியவருக்கு இந்நோய்க்கான உண்மையான காரணம் தெரியாவிட்டாலும் இது இயற்கையின் கோளாறினுல்தான் ஏற்படுகிறது என்பதில் கொஞ்சமும் சந்தேகமிருப்பதாகத் தெரியவில்லை.

கி. மு. மூன்றும் நூற்ருண்டில் அலெக்ஸாந்திரியாவில் புகழ் பெற்ற கிரேக்க மருத்துவப் பள்ளி இருந்தது. இங்கு ஹிரோஃபிலஸ் (Herophilus) என்ற புகழ் பெற்ற மருத்துவர் இருந்தார். நாடித் துடிப்பைக் கொண்டு முதன் முதலில் நோயின் தன்மையைக் கண்டவர் இவர். துடிப்பைக் கணக்கிட அந்தக் காலத்தில் கடிகாரம் ஏது? இருந்தது. அதற்கு நீர்க் கடிகாரம் என்று பெயர்.

விஞ்ஞான ரீதியாக மருத்துவத்தை அணுகும் முறை ஹிப்போகிரேட்டஸினுலும் அவரது வழி வந்தவர்களாலும் முன்னேறியது. அன்றைய உலகம் முழுவதும் அதன் புகழ் பரவியது. மத்திய தரைக் கடலைச் சார்ந்த நாட்டு மக்கள் கிரேக்க வைத்தியர்களின் திறமையில் அபார நம்பிக்கை கொண்டனர்.



ஹிப்போக்கிரேட்ஸ் மொழிகள்

□ மருந்துகளினுல் குணப்படுத்த முடியாத நோய்களைக் கத்தி குணப்படுத்தும், கத்தியினுல் குணமாகாதது நெருப்பினுல் குணமாகும். நெருப்பினுலும் குணமாகாத நோயைப் பிறகு எதனுலும் குணப்படுத்த முடியாது.

□ இயற்கையாகவே மிகவும் பருமனுக உள்ளவன் ஒல்லியாக இருப்பவனை விடச் சீக்கிரம் இறந்து விடுகிருன்.

கிரேக்கர்களைப் போலவே ரோமானியர்கள் மருத்துவத்துக்கு எத்தகைய மதிப்பளித்தார்கள் என்பதைப் பார்ப்போம். பொதுவாக ரோமானியர்களைத் திறமைசாலிகள், மதி நுட்பம் உடையவர்கள், முற்போக்குவாதிகள் என்று சொல்லுவதுண்டு. ஆனல் மருத்துவத் துறையில் அவர்களுடைய சாதனைகளைப் பார்க்கும்போது நமக்கு வியப்பாக இருக்கும். விஞ்ஞான ரீதியான மருந்துகளுக்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் கொடுக்கவில்லை. பிரபலமான வைத்தியர்களையும் அவர்கள் உருவாக்கவில்லை. ரோமானியர்களின் பிரபல எழுத்தாளரான பிளினி (Pliny) கி. பி. முதலாம் நூற்ருண்டில் எழுதிய தம் நூலில் குறிப்பிட்டிருக்கிருர். ''வைத்தியர்கள் இல்லாமலேயே ரோமானியர்கள் அறுநூறு ஆண்டுகளாக வாழ்ந்திருக்கிருர்கள்!'' என்று.

ரோமானியர்களை நோயே அணுகவில்லையா? நோய்வாய்ப்படும் போது அவர்கள் என்ன செய்தார்கள்? ஒவ்வொரு குடும்பத் தலைவனிடமும் மருந்துகள் அடங்கிய பெட்டகம் இருக்கும். தேவைப்பட்ட போது, தேவைப்பட்டவர்களுக்கு அவரே அந்த மருந்துகளைக் கொடுப்பார். வைத்தியர்களை வரவழைக்கவோ அணுகவோ மாட்டார்கள். அது சரி, இந்த மருந்துகள் எல்லாம் எப்படி யார் தயாரித்தவை? நம் ஊரில் பாட்டி வைத்தியம் என்று சொல்லுகிறேம் இல்லையா? அப்படிப்பட்ட மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள்தான் அவை. லெட்டூஸ் (Luttuce) என்ற கீரையிலிருந்து மட்டும் நாற்பத்திரண்டு வகையான பரிகாரங்களை ரோமானியர்கள் அறிந்திருந்ததாக பிளினி எழுதியிருக்கிருர்.

மூலிகை மருந்துகள் சிறப்புடையனவாகவே இருக்கலாம். ஆனல் ரோமானியர்களுடைய வேறு சில சிகிச்சை முறைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கவையாக இல்லை. கிளாடியேட்டர்களின் ரத்தம், மிருகங்களின் கழிவு, மனிதனின் மாமிசம் —



பல்வலிக்கு ரோமானியர்களின்
தலைவலி வைத்தியம்

இவைகளும் சில ரோமானிய மருந்துகளில் இடம் பெற்றிருந்தன. இதோ ரோமானிய சிகிச்சை முறைகளில் சில.

ஆடும் பற்களைக் கெட்டியாக்க முழுத் தலையைத் தாடையோடு வைத்துக் கட்ட வேண்டும்.

ஈறுகளில் வலி இருக்குமானால் அதைக் குணப்படுத்த கொலையுண்டவனின் பல்லைக் கொண்டு ஈறிலே தேய்த்தால் போதும்.

வயிற்று வலியா? வலி உள்ளவன் தனது காலைக் கழுவி அந்தத் தண்ணீரையே குடித்தால் போதும். வயிற்று வலி ஓடியே போகும்!

இயேசுபிரான் அவதரித்த காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தில் ஏராளமான கிரேக்க வைத்தியர்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் ஆரம்பத்தில் ரோமானியர்களுக்குக் கிரேக்க வைத்தியர்களிடம் நம்பிக்கை ஏற்படவில்லை. ஆனால் பிற்காலத்தில் கிரேக்க வைத்தியர்களின் வெற்றிகரமான வைத்திய முறையின் புகழ் பரவவே அவர்களிடம் ரோமானியர்களுக்கு நம்பிக்கை ஏற்படலாயிற்று. கி.மு. 46ல் ஸீஸர் எல்லாக் கிரேக்க வைத்தியர்களையும் ரோமானியப் பிரஜைகளாக அங்கீகரித்தார். ஆனால் வைத்தியருக்கான தகுதி பற்றி எவ்வித ஆய்வும் கிடையாது. ஆகவே, யாரும் தம்மை வைத்தியர் என்று கூறிக் கொண்டு தொழில் நடத்தலாம்.

மருத்துவத்தில் தான் ரோமானியர்கள் இவ்வளவு அலட்சியமாக இருந்தார்களே தவிர ரண சிகிச்சையில் வல்லவர்களாக விளங்கினார்கள். டான்ஸிலை அகற்ற அறிந்திருந்தார்கள். எலும்பு முறிவைச் சரி செய்யவும் செயற்கைக் கால்களைத் தயாரித்துப் பொருத்தவும் கூட அவர்களுக்குத் தெரிந்திருந்தது. பாம்பியின் இடிபாடுகளில் ரோமானிய அறுவைச் சிகிச்சைகளுக்கான கருவிகள் பல கிடைத்திருக்கின்றன.

நோய்களுக்கு மருந்து கொடுத்துச் சிகிச்சை அளிக்கும் முறையில் ஏன் ரோமானியர்கள் அதிகக் கவனம் செலுத்தவில்லை? காரணம் நோய் அதிகமாக அணுகாத வகையில் அவர்கள் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருந்ததுதான்.

பிரும்மாண்டமான வாய்க்கால்களைக் கட்டி அதன் மூலம் சுத்தமான குடி நீரைத் தங்கள் நகரங்களுக்குக் கொண்டு வரச் செய்திருந்தார்கள். கழிவுகளை நகருக்கு வெளியே கொண்டு செல்ல பூமிக்கு அடியிலே வடிகால்களை அமைத்திருந்தார்கள். இத்தகைய சுகாதார முறைகளால் நோய்கள் அவர்களை அதிகமாகத் தாக்கவில்லை போலும்.

ரோமானியர்களின் காலத்திலே மூப்பனடந்தவரும், பெரும் பிணியாளரும் மிகக் குறைவான சிகிச்சை அளிக்கப் பட்டு மரணத்தைத் தழுவினார்கள்.

ஆனாலும் யுத்த களங்களில் போர் வீரர்களோடு மருத்துவச் சேவகர்கள் *(Medical orderlee)* காயம் பட்ட வீரர்களுக்கு உடனுக்குடன் சிகிச்சை அளிக்கச் சென்றார்கள். போர் வீரர்களுக்குத் தான் ரோம சாம்ராஜ்யத்தில் மதிப்பும் மரியாதையும்.

கி. பி. 164ல் கேலன் *(Galen)* என்ற கிரேக்க வைத்தியர் ரோம சாம்ராஜ்யத்துக்கு வந்தார். ரோமானியச் சக்கரவர்த்திக்கு வைத்தியம் செய்வதற்காகவே வரவழைக்கப்பட்டார் காலன். தமனி என்ற ரத்தக் குழல்களின் மூலம் உடலில் ரத்த ஓட்டம் நிகழ்கிறது என்ற உண்மையைக் கண்டவர் கேலன். அதுவரை ரத்தக் குழல்களில் வெறும் காற்றுத்தான் இருப்பதாக நம்பி வந்தார்கள்!

முதல் பக்க விடை :

1. குதிரையின் பெயர் யூனிகான் Unicorn. மீனின் பெயர் நார்வால் (Narwal) இதைக் கடல் யூனிகான் என்பார்கள். பார்பாய்ஸ் (Porpoise) என்ற மீன் இனத்தைச் சேர்ந்தது.

2. சீக்கியர்கள் மட்டுமே பயன்படுத்திய இக் கத்தியின் பெயர் காய்த் (Quoit).

3. இல்லாந்துக்காரர்கள் மது அருந்தும் கொம்பு (Drinking Horn) பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

4. இந்த மானின் பெயர் நூ (Gnu).



புஷ்பக விமானத்தில் பிரயாணப்பட்டு அயோத்தியை நெருங்கும் சமயம், பரத்வாஜ முனிவர் தன் ஆசிரமத்தில் வந்து இறங்குமாறு அழைக்கிறார்.
ஜெய் ஹனுமான்
கதை: ரா. கணபதி
சித்திரம்: விஜய
37
ஹே, ராமா! நாளைக்குத் தான் பதினான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. எனவே இன்று என் ஆசிரமத்தில் தங்கி நாளை நீ அயோத்தி போகலாம்.
மாருதி! ஒருவேளை பரதன் தவறுதலாகக் கணக்கிட்டு இன்றே பதினான்கு ஆண்டுகள் ஆகிவிட்டதாக எண்ணி, நான் வரவில்லையே என்று ஏதாவது விபரீதமான முடிவெடுத்து விடப் போகிறான். நீ உடனே கிளம்பி என் வருகையை அவனுக்கு அறிவித்து வா.
ராமன் சந்தேகித்தபடியே பரதன், அண்ணன் வராததினால் தீக்குளிக்கத் தயாராகிறான்.
வந்தான், வந்தான் பரதா! ரகுராமன் வந்தான், வந்தான்...!
மறுநாள் நந்திக் கிராம வாசிகளும், பரத சத்ருக்னர்களும் ஸ்ரீராமனை வரவேற்றனர்.
தம்பி...!
அண்ணா...!
அனைவரும் கோலாகலமுடன் அயோத்தியை அடைந்தனர்.
இன்றே முகூர்த்தம் நன்றாக உள்ளது. அயோத்தியின் சக்கரவர்த்தியாக இன்றே ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்வோம்.


மாருதி! பாரதத்தின் நான்கு திசைகளுக்கும் போய் ஆங்காங்குள்ள புண்ணிய நதிகளின் நீரையெல்லாம் கொண்டு வரவேண்டும். அது உன்னால்தான் சாத்திய மாகும்.
அப்படியே செய்கிறேன்.
ஆகாய மார்க்கத்தில் பறந்து சென்ற அனுமான் புண்ணிய நதிகளின் நீரையெல்லாம் பொற்குடங்களில் நிரப்பிக் கொண்டு நொடியில் திரும்புகிறான்.
புனித நீராடி, புதியது புனைந்து நிற்கும் ராமனுக்கு முடிசூட்டுகிறார் வசிஷ்டர்.
மக்கள் நலனே தன்னலமாக எண்ணித் இத்தரணி புகழப் பல்லாண்டு வாழ்வாயாக.
ராமன் எல்லோருக்கும் பரிசுகள் வழங்கினார்.
சுக்ரீவனுக்குப் பொன் மாலை
விபீஷணனுக்குப் பீதாம்பரம்
அங்கதனுக்குத் தோள்வளை
சீதைக்குச் சந்திரஹாரம்
அன்னை சீதை அனுமனுக்குப் பட்டும் பீதாம்பரமும் அணிகலன்களும் அளித்தாள். பிறகு கணவன் தனக்களித்த சந்திரஹாரத்தையும் ......
ஆண்மையிலும் அறிவிலும் எவன் சிரேஷ்டமானவனோ எவன் உன் ஆசியை மிக அதிகமாகப் பெற்றிருக்கிறானோ அவனுக்கு உன் சந்திரஹாரத்தைக் கொடு. ஆஞ்சநேயா! உனக்கு எத்தனை செய்தாலும் அது போதாது.


குழந்தைகளே!
அறிவு, அன்பு, ஆற்றல், அடக்கம், ஆண்மை
அனைத்தின் உறைவிடமான அனுமான், சீதா
ராமன் கதை எங்கு நிகழ்ந்தாலும் அங்கெல்லாம்
இன்று கூட நம் கண்களுக்குத் தெரியாதவாறு ஆனந்தக்
கண்ணீர் உகுத்தபடி ராமன் கதையைக் கேட்டுக் கொண்
டிருக்கிறார். இதோ இங்கு கூட, உங்களுக்கெல்லாம்
அறிவும், அன்பும், ஆற்றலும், அடக்கமும் உண்டாகட்
டும் என்று ஆசி கூறிக் கொண்டிருக்கிறார். அஞ்சனை
மைந்தனை, உடலாற வணங்குங்கள். உள
மாற, வாயாரக் கோஷமிடுங்கள்.
ஜெய் ஹனுமான்!
சுபம்



பக்கத்தில் உள்ள படம் உலகம் தோன்றியதிலிருந்து படிப்படியாக அதன் வளர்ச்சியைக் காட்டுகிறது. கீழே இருந்து இதைப் பார்க்க வேண்டும். ராட்சத மிருகங்களைப் பற்றிப் படிப்பதற்கு இந்தப் படம் உங்களுக்கு உதவியாக இருக்கும்.

இந்த அடுக்கின் அடிமட்டத்தில் (கீழே) உள்ளது கிரிப்டோ ஸாயிக் ஈயான் — (Cryptozoic Eon) கண்ணுக்குப் புலப்படாத பிராணிகள் வாழ்ந்த சகாப்தம். இதற்குப் பிரீ காம்பிரியன் எரா (Pre-Cambrian Era) என்றும் பெயர். நாற்பத்தோராயிரம் மிலியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட உலகத்தின் நிலை இது.

அடுத்து — பாலியோ ஸாய்க் சகாப்தம் — (Poleozoic Era). 335 மிலியன் ஆண்டுகள். இது இரண்டு அடுக்குகளைக் கொண்டது. இதில் காம்பிரியன் (Cambrian) ஆர்டோவிஷன் (Ordovician) ஸிலூரியன் (Silurian) டிவோனியன் (Devon'on) கார்போனிஃபெரஸ் (Carboniferous) பெர்மியன் (Permian) என்ற பல கால கட்டங்கள். அவற்றில் தோன்றிய ஜீவன்களை இந்த இரு அடுக்குகளிலும் பார்க்கிறீர்கள். நான்காவது அடுக்குத்தான் மெஸோ ஸாய்க் சகாப்தம் — (Mesozoic Era) இது 120 மிலியன் ஆண்டுகள். இதில் ட்ரையாஸிக் (Triassic) ஜுராஸிக் (Jurassic) க்ரீடேஷஸ் (Cretaceous) ஆகிய கால கட்டங்களில்தான் ராட்சத மிருகங்கள் வாழ்ந்தன. ஐந்தாவது சீனோ ஸாய்க் சகாப்தம் (Cenozoic Era) அறுபது மிலியன் வருஷங்கள். இந்தக் கால கட்டத்தில்தான் ராட்சத மிருகங்கள் அழிந்து மனிதன் தோன்றினன்.

எரியாப்ஸ் — ராட்சதத் தவளை

நீரிலிருந்து நிலத்துக்கு முதலில் வந்த ஜீவராசி எப்படி இருந்தது என்பதில் ஆராய்ச்சியாளரிடையே கருத்து வேறுபாடு உள்ளது. நீரிலிருந்து நிலத்தில் வாழ வந்தவை கடல் தேள்கள் என்று சிலரும் நுரையீரலுடைய மீன்கள்தான் என்று சிலரும் ஏராளமான கால்கள் உள்ள பூரான்போன்ற—லெண்டிபீடு (centipede) ஜீவன்கள்தான் என்று பலரும் கருதுகிறார்கள். நிலத்துக்கு முதலில் எது வந்தாலும் டெவானியன் பருவத்தின் முடிவில் இந்த மூன்றுமே நிலத்தில் வாழ்ந்திருக்கின்றன.


வறண்ட நாட்களில் சேற்றிலே முன்னேறிச் செல்லும் அளவுக்கு நுரையீரல் மீன்களின் துடுப்புக்கள் வலுவுடையனவாக மாறின. பிற்காலத்தில் இந்தத் துடுப்புக்களே கால்களாக மாறி ஆம்ஃபிபியன் இனம் உருவாகியது. கடல் தேள் நிலத் தேளாகவும், கடல் பூரான் சிலந்தி போன்ற பூச்சி இனங்களாகவும் நிலத்தில் பெருகலாயின.

ஆம்ஃபிபியன் இனம் என்றால் என்ன? நீர், நிலம் இரண்டிலும் வாழ்வதற்கு ஏற்ற உடலமைப்பைக் கொண்ட ஜீவராசி என்று பொருள். தவளை, தேரை, ஆமை இவைகளைக் கூறலாம். இவை நீர் நிலைகளின் அருகே வசிக்கும். நுரையீரலால் சுவாசித்து நிலத்தில் நடக்கக் கால்கள் இருந்தாலும் இவை தண்ணீரில்தான் முட்டை இடும். முட்டையிலிருந்து வெளிப்படும் ஜீவனுக்கு மீனைப் போல் செவுள்கள் இருக்கும் சுவாசிக்க. கால்கள் இருக்காது. அந்த நிலையில் நீரில்தான் வாழ முடியும். குட்டி ஆம்ஃபிபியன்கள் வளர வளர அவைகளுக்குச் செவுள்கள் மறைந்து நுரையீரலும் கால்களும் தோன்றும்.

ஆதி ஆம்ஃபிபியன்கள் எப்படி இருந்திருக்கும் என்பதற்கு எவ்விதமான தடையங்களும் இல்லை. நிலக்கரி யுகத்தின் முடிவில் பலவிதமான ஆம்ஃபிபியன்கள் நிலக்கரி சதுப்பு நிலங்களில் நீந்தியும் ஊர்ந்தும் வாழ்ந்தன. நிலக்கரி யுகத்தில் கடலில் ஆதிக்கம் செலுத்தியவை சுறா மீன்கள். நிலத்தில் வாழ்ந்த ஆம்ஃபிபியன்கள், பல அடி நீளமுள்ளவையாகவும் தோலில் ஆழ்ந்த மஞ்சள், ஆரஞ்சு வண்ணக் குறியீடுகள் உள்ளவையாகவும் இருந்தன. இப்படிப்பட்ட ஆம்ஃபிபியன்களில் ஒரு வகைதான் எரியாப்ஸ். பிரும்மாண்டமான (தலைப்பிரட்டை) தவளைக் குஞ்சைப் போன்ற தோற்றம். அகன்ற தட்டையான தலையும் உடலும் குட்டையான கால்களும் வாலும். இன்னொரு வகைக்கு நுரையீரலும் செவுள்களும் இருந்தன. இதன் செவுள்கள் உடலுக்கு வெளியே தலைக்குப் பின்னால் இருந்தது. இந்தச் செவுள்களை அடுத்து மிகச் சிறிய இரு கால்கள். இவற்றினால் எவ்விதப் பயனுமில்லை. இந்த வகை ஆம்ஃபிபியனுக்குப் பின்னங்கால்கள் கிடையாது. அதற்குப் பதில் பாம்பைப்போன்ற நீண்ட உடல். நிலக்கரி யுகத்தில் வாழ்ந்த மற்ற பூச்சிகள் இன்றைய பூச்சிகளைப் போல பல மடங்கு பெரியவையாக இருந்தன. இரண்டடி நீளமுள்ள இறக்கைகளையுடைய தட்டாரப் பூச்சிகளும் ராட்சதக் கரப்பான் பூச்சிகளும் வாழ்ந்தன. இந்த யுகத்தில் கடலிலே சுறா மீன்கள் ஆட்சி புரிந்ததைப் போல நிலத்திலே பெரியப் பெரிய கரப்பான் பூச்சிகள் ராஜ்யம் நடத்தின.

தேள், சிலந்தி, மற்றும் பூச்சிகளுக்கு முதுகெலும்பு கிடையாது. முதுகெலும்போடு நிலத்தில் வாழ்ந்த முதல் பிராணிகள் ஆம்ஃபிபியன்கள்தான். எரியாப்ஸ் என்ற வாலோடு கூடிய பெரிய தவளை போன்ற ஜீவன் எட்டு அடிகளுக்கும் அதிகமாக நீளமுடையவை. இதற்கு மூன்று கண்கள் இருந்ததாக விஞ்ஞானிகள் கருதுகின்றனர். வழக்கமான இரு கண்களைத் தவிர நெற்றியின் நடுவிலும் ஒரு கண் இருந்ததாம்—பரமசிவனைப் போல! இதன் வாயோ அம்மாடி! தலையை விடவும் அகன்றது.

எரியாப்ஸ் நிலத்தில் நடந்தது. ஆனால் வேகமாக அல்ல. பெரிய கால்கள்தான். ஆனால் குட்டையானவை. அடிவயிறு பூமியில் தொட்டபடி இருந்தது. சதுப்பு நிலங்களின் ஓரத்தில் நாளின் பெரும் பகுதி வெயிலில் காய்ந்தபடி கிடக்கும். விரோதிகளுக்குப் பயந்து ஓட வேண்டிய நிர்ப்பந்தம் கிடையாது. ஏனென்றால் அப்போது இதைவிடப் பெரிய நிலப் பிராணிகள் ஏதும் இல்லை. -கிருஷ்ணவேணி



மலரும் பூவெனப் பிள்ளை வளர்ந்திடப் பலமான துணை—

இன்க்ரிமின்*

பட்டுப் போன்ற பாப்பாவின் வளர்ச்சியிலே—முதலிரண்டு ஆண்டுகள்...மொட்டு விரியும் நேரம்—சிட்டுப்போல் பறக்க சிறகு முளைக்கும் பருவம்—இந்த முக்கியமான பருவத்திலே உங்கள் கண்மணிக்குக் கட்டாயம் தேவை—இன்க்ரிமின். பின்னர் பாருங்களேன் அவன் வளர்ச்சியை! பசித்துப் புசிப்பான்...உண்ணும் உணவெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக மாறும். நலம் தரும் வைட்டமின்களோடு, உங்கள் மகனின் வளர்ச்சிக்கு மிக மிக அத்தியாவசியமான அமினோ அமிலம், லைஸின் யாவும் நிறைந்தது இன்க்ரிமின்.




டிராப்ஸ்—2 மாதங்கள் முதல் 2 வயது வரையில்
ஸிரப்—14 வயது வரையில்

இன்க்ரிமின்* டானிக்

உணவையெல்லாம் ஓங்கிய வளர்ச்சியாக்கும் உங்கள் பிள்ளை பூவாய் மலர்ந்து சிரிக்கும்!

டாக்டர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமான பெயர்—(Lederle) ஸயனமிட் இந்தியா லிமிடெடின் ஒரு பிரிவு

*அமெரிக்கன் ஸயனமிட் கம்பெனியின் ரெஜிஸ்டர்டு டிரேடு மார்க்


10 ml.
Incremin
drops LYSINE-VITAMINS
TONIC APPETITE
STIMULANT



கிட்டுவுக்கும் பட்டுவுக்கும் பரீட்சை. சரித்திர பாடம். செங்கிஸ்கானின் படையெடுப்பைப் பற்றி மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

பரமேசுவரன் தாத்தா இரண்டு கைகளிலும் தண்ணீர்க் குடத்துடன் உள்ளே வந்தவர் குடங்களைக் கீழே வைத்துவிட்டு, 'உஸ், அப்பாடா! தண்ணீர் இல்லாவிட்டால் மனுஷனாலே எப்படி வாழ முடியும்?' என்று பெருமூச்சு விட்டார்.

''ஆனால் பாலைவனங்களில் வாழறவாளும் மனிதர்கள்தானே?'' என்றாள், பட்டு.

''வாஸ்தவம்தான். ஆனால் அதற்கு ஏற்றபடி அவர்கள் உடலும், பழக்க வழக்கங்களும் இருக்கும்'' என்றார் தாத்தா. பிறகு ''கிட்டு நீ இப்போ படித்துக் கொண்டிருந்தாயே செங்கிஸ்கான்னு, அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவன்னு தெரியுமா?'' என்றார்.

''மங்கோலியாவைச் சேர்ந்தவர். மங்கோலியர்களின் படையெடுப்பு நம் நாட்டின் மீதும் இருந்தது இல்லையா தாத்தா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம். ஒரு காலத்தில் இவ்வுலகில் பாதியை மங்கோலியர்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார்கள். சீனாவைக் கபளீகரம் செய்த அவர்கள் படை மேற்காசியா வழியாக ரஷ்யா, ஐரோப்பா இங்கெல்லாம் சென்றது. சென்றவிடமெல்லாம் வெற்றிதான். அது சரி செங்கிஸ்கானைப் பற்றி உனக்கு என்ன தெரியும்?''

''பெரிய போர் வீரர் என்பதைவிடக் கொள்ளைக்காரர் என்று தெரிகிறது'' என்றாள் பட்டு.

''செங்கிஸ்கானின் இளமைப் பெயர் டெமுஜின். பன்னிரண்டு வயதில் இவருடைய தகப்பனார் இறந்து போனார். சூழ்ச்சி, சாதுரியம், கொலை, கொடுமை இவைகளின் அடிப்படையில் 'டெமுஜின்' விரைவிலேயே மங்கோலியர்களின் தலைவனானான். போர்த் திறமை மிக்க டெமுஜின் செங்கிஸ்கான் என்ற பட்டத்துடன் உலகையே வெற்றிகொள்ளக் கிளம்பி விட்டான்'' என்றார் தாத்தா.

''அது சரி, நாம் இப்போ எங்கே கிளம்பப் போகிறோம்?'' என்று கேட்டான், கிட்டு.

''ஏன், மங்கோலியாவுக்கே போனால் போகிறது'' இது பட்டு.

''இங்கே தண்ணீர் கிடைக்காமல் படும் அவதி போதாதா? கோபி பாலைவனத்துக்குப் போய், வறுபட வேண்டுமாக்கும்!'' தாத்தாவின் கையிலிருந்த பனை ஓலை விசிறி வேகமாகப் படபடத்தது.

''கோபி பாலைவனத்து வறட்சி எப்படி இருக்குன்னு தெரிந்துகொண்டால் நம்ப ஊர் வறட்சியில் வாழ்வது சுலபமாக இருக்காதா?''

''மங்கோலியர்கள் நிலையாக ஓர் இடத்தில் வாழாதவர்கள். வேட்டையாடியும், ஆடு மாடுகளை மேய்த்தும் வாழுவார்கள். இவர்களுடைய கால்நடைகள் புல்வெளிகளை வெகு விரைவில் கபளீகரம் செய்துவிடும். ஆகவே புதிய புல் வெளிகளைத் தேடி இடம்





மாறிக்கொண்டே இருப்பார்கள். ஓர் இடத்தில் நிரந்தரமாகத் தங்காததினால் இவர்கள் வீடுகளைக் கட்டிக்கொண்டதில்லை. தோலினால் ஆன கூடாரங்களில் வாழ்ந்து வந்தார்கள். மங்கோலியர்கள் உடல் வலிமையும், மனோபலமும் கொண்டவர்கள். பாலைவனத்திலும், கடும் குளிரிலும் வசதிகளில்லாதபோதும் உயிரோடிருந்தாக வேண்டும் என்ற குறிக்கோளுடன் வாழ்பவர்கள் மங்கோலியர். குழந்தை நிற்க ஆரம்பித்தவுடன் அவர்களைக் குதிரை மீது ஏற்றி உட்கார வைத்து விடுவார்களாம் — ஆணானாலும் சரி பெண்ணானாலும் சரி. அதுவும் சேணம் போட்ட குதிரை மீதல்ல. குதிரையின் வெறும் உடம்பில். தளர் நடை பயில வேண்டிய குழந்தை குதிரை மீது அமர்ந்து பொட்டல் வெளியில் அதை விரட்டிச் செல்லும். கீழே விழுந்து விடாமல் அதன் மீதிருக்கப் பழக்கியும் கொள்ளும். இப்படிக் குதிரைச் சவாரி மட்டுமா? ஓடும் குதிரையின் மீதிருந்தபடியே விஷம் தோய்ந்த அம்புகளையும் ஈட்டிகளையும் குறி தவறாமல் எய்யவும் கற்றுக் கொள்வார்கள். எரிக்கும் கோடை, அதே மாதிரி எலும்புகளுக்குள்ளும் புகுந்து கடிக்கும் கடுங் குளிர். கடினமான வாழ்க்கை. சகிப்புத் தன்மை. ஆனால் சந்தோஷமாக இருப்பார்கள். உணவுக்கு இறைச்சி, உடுக்கக் கம்பளி, இருக்கக் கூடாரத்துத் தோல். எல்லாம் கால்நடைச் செல்வம் தான். பெண்களும் குழந்தைகளும் ஆண்களோடு இடம் விட்டு இடம் மாறிப் பிரயாணப்பட்டு அத்தனை கஷ்டங்களிலும் பங்கு கொள்வார்கள்.'' விவரித்துக் கொண்டே பாகவதப் புத்தகத்துக்குள்ளிருந்து ஒரு கவரை எடுத்துக் கிட்டுவிடம் கொடுத்தார் தாத்தா. ''இது வந்து ஒரு மாதமாகிறது. நான் உங்களிடம் சொல்லவே இல்லை'' என்றார். கடிதத்தைப் படித்தான் கிட்டு.

சுகே போ (Sukhe Bo) என்ற மங்கோலியப் பையன் இவர்களைத் தன் நாட்டுக்கு வரும்படி எழுதியிருந்தான்.

''தாத்தா தாத்தா...'' என்று பரபரத்தான் கிட்டு. பட்டுவும் தயாராகக் கண்களை மூடியபடி புருவத்தை முன்னால் நீட்டிக் கொண்டு நின்றாள். பரமேசுவரத் தாத்தா மந்திர மெழுகை எடுத்துக் குழந்தைகளின் புருவத்தில் தடவினார். அடுத்த வினாடியே மூவரும் மங்கோலியாவின் கோபி பாலைவனத்துக்கு அருகில் நின்று கொண்டிருந்தனர். நல்ல பட்டப் பகல் வேளை. சற்றுத் தூரத்தில் பத்து வயதுப் பையன் குதிரையை விரட்டிக் கொண்டு இவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தான். அவன்தான் கடிதம் எழுதிய சுகேபோ. குதிரை வந்த வேகத்தில் பின்னால் ஒரே புழுதிப் படலம்.

அழகாகச் சிரித்தான் சுகேபோ. இரு கைகளையும் குவித்து இவர்களை வரவேற்றான். பூவேலை செய்யப்பட்ட குல்லாய், ஆழ்ந்த சிவப்பு, பச்சை, மஞ்சள் வர்ணங்களில் மங்கோலிய பாணியில் உடை. இந்திய பாணியில் கரங் கூப்பி வரவேற்ற சுகேபோவை ''எங்கள் வரவேற்பு முறையை அறிந்திருக்கிறாயே, மிக்க மகிழ்ச்சி'' என்றான் கிட்டு.

அட்டையில் :

தாகம் ரொம்ப எடுக்குது
தவிச்சு நாக்கும் வறளுது
காகம் போலக் குடிப்பதற்குக்
கல்லைப் போட முடியுதா?
மேகக் கூட்டம் ஆகாசத்தில்
மேலே கூடி இடி முழங்கி
ஆகா! மழை பொழியணும்
ஆசைத் தீரக் குடிக்கணும்!



வண்ணப்படம்: தேவ்தாஸ் "குலாம்"

''போர்க் குணம் கொண்ட எங்களை அமைதியும் அன்பும் கொண்டவர்களாக வாழும்படி மாற்றியவர் உங்கள் நாட்டில் அவதரித்த புத்தர் பிரான் தானே? பௌத்த மதத்தை ஏற்றபிறகு தான் உலகினர் எங்களை நாகரிக மக்களாக மதித்தனர். திபெத்திய மத குருமார்களை லாமாக்கள் என்றழைப்பது போல எங்கள் மத குருமார்களையும் நாங்கள் லாமாக்கள் என்றே அழைக்கிறோம். உங்களிடமிருந்து பௌத்த மதத்தை நாங்கள் ஏற்றது போல எங்களிடமிருந்தும் நீங்கள் ஒரு நாகரிகத்தை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்றான் மங்கோலியச் சிறுவனை சுகே போ.

சரித்திரப் புலியான கிட்டுவும் சற்றே விழித்தான். அவன் தவிப்பைக் கண்ட சுகே போ கூறினான், ''பாரதத்தில் மொகலாயர்களின் ஆட்சி காலம் குறிப்பிடத் தக்கதில்லையா? அந்த முகலாய வமிசத்தினருக்கு அடிகோலியவர் எங்களுடைய மூதாதையரான தைமூர் தானே?'' என்றபோது கிட்டுவுக்கும் அந்தச் சரித்திரக் குறிப்பு நினைவுக்கு வந்து விட்டது.

''எங்களை வரவேற்கவா குதிரைமீது வந்தாய்? உன் வீடு வெகு தூரத்திலா?'' என்று கேட்டாள் பட்டு.

''இருபது மைல் தூரப் குதிரைப் பந்தயத்தில் கலந்து கொள்ளுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டு அப்படியே இங்கு வந்தேன். என் வீடு சற்றுத் தூரத்தில்தான்'' என்றான் சுகேபோ.

''குதிரைப் பந்தயமா?''

''ஏன் வியப்பாக இருக்கிறதா? ஐந்து வருஷமாக நான் இந்தப் போட்டிக்காகப் பயிற்சி பெறுகிறேன். எனக்கு இப்போது வயது பத்து.''

''ஐந்து வயதிலிருந்தே குதிரைப் பந்தயத்துக்குப் பயிற்சியா?'' வியந்தாள் பட்டு.

''இதில் அதிசயம் ஏதுமில்லை. இன்னும் சின்ன வயதிலேயே எங்களைக் குதிரை மீது ஏற்றிக் கையில் லகானையும் கொடுத்து விடுவார்கள். எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. முதன் முதவில் நான் குதிரைப் பந்தயத்திற்கான பயிற்சியில் கலந்து கொள்ளப் போன போது கீழே விழாதிருக்க என் இரு கால்களையும் குதிரையின் அடி வயிற்று வழியாகத் தோல் பட்டையினால் இணைத்துக் கட்டி விட்டார்கள். பதினெட்டு மைல்கள் எப்படியோ கடந்து விட்டேன். கால் கட்டு நழுவிவிட்டது. திடீரென்று குதிரை மீதிருந்து தூக்கியெறியப்பட்டேன். அதை என்னால் மறக்கவே முடியாது. அடுத்த ஆண்டு போட்டியில் கலந்து கொள்வதற்கான தகுதியை எனக்கு வழங்கி விடுவார்கள். ஆயிரக் கணக்கான ரசிகர்கள் இரு பக்கமும் குழுமி நின்று போட்டியில் கலந்து கொள்ளும் சிறுவர்களையும் சிறுமிகளையும் கூச்சலிட்டு உற்சாகப் படுத்துவார்கள்.''

''உங்கள் நாட்டைப் பற்றி இவர்களுக்கு நீயே சொல்லுடாப்பா'' என்றார் தாத்தா சுகேபோவிடம்.

''மத்திய ஆசியாவில் நாடோடிகளாக வாழும் இனத்தவர் நாங்கள். சீனாவின் வடக்கு, மேற்குப் பகுதிகளிலும் ரஷ்யாவின் தென் பகுதியிலுமாகப் பரந்துள்ள 15,65,000 சதுர மைலில் சிதறிக் கிடக்கிறோம் மங்கோலியர்களாகிய நாங்கள். சீனாவின் ஒரு பகுதியான உள் மங்கோலியாவில் மட்டும் (Inner Mongolia) மூன்று மிலியன் பேர்கள் வசிக்கிறோம். வெளி மங்கோலியாவில் (outer Mongolia) 9,50,000 பேர்கள் வசிக்கிறோம். ஐம்பது ஆண்டுகளாக மங்கோலியா சுதந்திரக் குடியரசு நாடாக இருந்து வருகிறது.''

''மங்கோலியாவின் பெரும் பகுதி, பாலைவனம்தானே?'' என்று குறுக்கிட்டான் கிட்டு.

''ஆமாம். மிகவும் வறட்சியான பிரதேசம். தகிக்கும் கோடை, கொடுமையான பனிக் காலக் குளிர். மரங்களற்ற பொட்டல் வழியாக விரைத்துப் போகும்படியான குளிர் காற்று வீசும். வடக்குப் பகுதியில் மலைகள், நதிகள்,

கணவாய்கள் உண்டு. இங்குதான் விவசாயத்துக்குப் பயன்படும் நிலம். நிரந்தரமாக ஓரிடத்தில் தங்கி வாழும் குடியானவர்களும், வேட்டையாடுவோரும் இந்தப் பகுதியில்தான் வாழ்கிறார்கள். காடுகளில் சிறுத்தை மற்றும் பல கொடிய விலங்குகள் வாழுகின்றன. வடக்கிலிருந்து தெற்கே போகப் போக மரங்கள் குறைந்து, பசுமை அரிதாகி கோபி பாலைவனம் ஆரம்பமாகிவிடும். இந்தப் பாலையின் சில பகுதிகளில் உயரமான ஒருவகைப் புல் வளர்வதுண்டு. ஒட்டகங்களின் மேய்ச்சல் பிரதேசம் இவை.''

''உங்கள் நாட்டில்தானே இரு திமில்களோடு கூடிய ஒட்டகங்கள் இருக்கின்றன?'' என்று கேட்டாள்பட்டு.

''ஆமாம். கால்நடைகளை நாங்கள் ஒட்டகங்களின் மீதிருந்தபடிகூட மேய்ப்போம். ஆனாலும் குதிரைகள் மீதிருந்தபடி கால்நடைகளைக் கண்காணிப்பது-தான் அதிகம். கால்நடைப் பண்ணைகள் கூட்டுறவு முறையில் இயங்குகின்றன. ஒரு பண்ணையில் மட்டும் 14,000 குதிரைகள் இருக்குமென்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்'' என்றான் சுகே போ, தன் குதிரையை வாஞ்சையாகத் தடவிக் கொடுத்தபடி.

''அரபு மற்றும் வேற்று நாட்டுக் குதிரைகளிலிருந்து உங்கள் குதிரைகள் மாறுபட்டிருக்கும் இல்லையா?'' என்று கேட்டான் கிட்டு.

''ஆமாம், தோற்றத்தில். எங்கள் குதிரைகளுக்கு முரட்டுத் தோல். ரோமமும் அடர்த்தியாக இருக்கும். ஆனால் நன்றாக ஓடும், உழைக்கும்.''

''சஹாரா பாலைவனத்தைப் போலத்தான் உங்கள் கோபி பாலைவனமும் இருக்குமா?'' என்றாள் பட்டு.

''பாலைவனம் என்றதும் எனக்குத் தாகம் எடுக்கிறது சுகே'' என்றான் கிட்டு பரிதாபமாக.

''அடடே! நான் பாட்டுக்குப் பேசிக் கொண்டே இருக்கிறேன்! வீட்டுக்குப் போகலாம் வாருங்கள். பேசிக் கொண்டே போகலாம்'' என்று அவர்களை அழைத்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி நடக்கலானான் மங்கோலியப் பையன் சுகேபே.

— விகேயெம்



★

சின்னஞ்சிறு குருவி போலே சிரித்து பறந்துவாழ் — பாப்பா

ஐ.நா. ஸ்தாபனத்தில் குழந்தைகள் க்ஷேமநிதி என்று ஓர் அமைப்பு. இதில் குழந்தைகளுக்கான வேடிக்கை நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஐக்கிய அமெரிக்க ஸ்தாபனத்துக்குத் தலைவர் யார் தெரியுமா? இதோ அருகில் உள்ள இந்த ஆறு வயதுப் பையன் கோட்னி ஆலன் ரிப்பிதான். இந்தப் பையன் தனது மூன்று வயதிலிருந்தே டெலிவிஷன் நிகழ்ச்சிகளில் தோன்றிப் புகழ்பெற்றவன் 'குழந்தைகளுக்கு உதவும் குழந்தைகள்' என்ற தலைப்பில் ஐ. நா. குழந்தை க்ஷேம நிதிக்காகத் தயாரித்த பல துண்டுத் திரைப் படங்களிலும் தோன்றி இருக்கிறான். இவனது உருவத்தை அச்சிட்ட ஸ்வெட்டர்கள் அமெரிக்கக் குழந்தைகளிடையே பிரபலம். அத்தகைய ஸ்வெட்டர் ஒன்றை அவனே அணிந்துகொண்டு எத்தனை உல்லாசமாகச் சிரிக்கிறான் பாருங்கள்!

படம், தகவல்: யு. எஸ். ஐ. எஸ்.

★



தெரியுமா?

1751. இங்கிலாந்தின் அரசர்களுள் வேல்ஸ் இளவரசர் என்ற பட்டத்தை முதன் முதலில் அடைந்த அரசர் யார்?

1752. நண்டு தின்னும் மலேசியக் குரங்குகள் மற்ற குரங்குகளிடமிருந்து எப்படி மாறுபட்டவை தெரியுமா?

1753. அமெரிக்காவின் பழங் குடிகளான இன்காஸ் இனத்தவரின்தேசிய மிருகம் எது தெரியுமா?

1754. குளம்புகளோடு கூடிய கால்களையுடைய பாலூட்டிகளுக்கு என்ன பெயர்?

1755. காண்டாமிருகத்தின்கொம்பு எதனால் ஆனது தெரியுமா?

1756. ரோம் நகரம் எத்தனை மலைகளின் மீது எழுப்பப்பட்டுள்ளது. அவற்றின் பெயர்கள் என்ன?

1757. ரோமனோவ் குடும்பம் *(Romanov Family)* ரஷ்ய சிங்காதனத்தில் எத்தனை ஆண்டுகள் அமர்ந்திருந்தது?

1758. லண்டன் பெருந்தீயினால் — 1666-ல் அழிந்த சர்ச்சுகள் எத்தனை?

1759. ஏசுபிரான் நிகழ்த்திய அற்புதங்களுள் ஒன்று; ரொட்டியும் மீனும் ஏராளமானவர்களுக்கு வழங்கியது. எத்தனை ரொட்டி, எத்தனை மீன்களை எவ்வளவு பேர்களுக்கு வழங்கினார்?

1760. ஏசுபிரானைக் காட்டிக் கொடுத்ததற்காக ஜூடாஸ் பெற்ற பரிசு என்ன தெரியுமா?

1761. பிரிட்டிஷ் மியூஸியத்தில் ரோஸெட்டா கல் *(Rosetta Stone)* என்று ஒரு புராதனக் கல்வெட்டுள்ளது. எகிப்தியர்களின் மொழியைப் படிப்பதற்கு இது உதவியாக உள்ளது. இந்தக் கல்லில் எவ்வளவு பகுதிகள் எப்படியெப்படி அமைந்துள்ளன தெரியுமா?

1762. வயிலினுக்கு எத்தனை தந்திகள்?

1763. ஒரு ஏக்கராவுக்கு எத்தனை சதுர கெஜங்கள்?

1764. பெண்டாதியன் *(Pentathion)* என்றால் என்ன?

1765. கடல் ராட்சதன் எனப்படும் ஆக்டபஸ் என்ற ஜந்துவுக்கு எத்தனை கைகள்?

1766. புடாபெஸ்ட் என்ற புகழ் பெற்ற நகரம் இந்த நதியின் கரையிலுள்ளது. இந்த நதியோடு ஒரு வண்ணத்தையும்தொடர்புபடுத்திக் கூறுவார்கள். அந்த நதியின் பெயரைச் சொல்ல முடியுமா?

1767. அயர்லாந்துக்கு மற்றொரு பிரபலமான பெயர் உண்டு. அது தெரியுமா?

1768. பாண்டாக் கரடியின் நிறம் என்ன தெரியுமா?

1769. மேற்கு ஆஸ்திரேலியாவின் சின்னம் எது?

1770. பஃபின் *(Puffin)* என்ற— பறவையின் அலகு கோடையில் எப்படித் தோற்றமளிக்கும் தெரியுமா?

1771. திருவையாற்றில் நடக்கும் ஸ்ரீ தியாகராஜ ஆராதனையின் போது வித்துவான்கள் பாடும் பஞ்சரத்ன கீர்த்தனைகள் எந்த ராகங்களில் பாடப்படுகின்றன ?

தெரியுமே!



விடைகள் : 1751. இரண்டாம் எட்வர்டு மன்னர். 1752. நீரில் நன்றாக நீந்துவதிலும் 'டைவ்' அடிப்பதிலும் வல்லவை. 1753. விகுனு (Vicuna) எனப்படும் ஒருவகை (லாமா) மிருகம். 1754. அங்குலேட்ஸ். 1755. அழுத்தப்பட்ட ரோமங்களால் உருவானது அந்தக் கொம்பு. 1756. ஏழு மலைகளின் மீது. பாலன்டைன், காபிடோல், அவென்டைன், கலீலியன், எஸ்குலைன், விமினல், குர்னைல் என்பவை அவற்றின் பெயர். 1757. மூன்று நூற்றாண்டுகள் - 1613-1917. 1758. எண்பத்தி ஏழு சர்ச்சுகள். 1759. ஐந்து ரொட்டித் துண்டுகளையும் மூன்று மீன்களையும் ஐயாயிரம் பேர்களுக்கு வழங்கினார். 1760. முப்பது வெள்ளிக் காசுகள். 1761. மூன்று பகுதிகளாக. மேல் பகுதிக்கு ஹைரோகிளிபிக்ஸ் (Hieroglyphics) என்றும் நடுப் பகுதிக்கு டெமோடிக் (Demotic) என்றும் கீழ் வரிசை எழுத்துக்கள் கிரேக்க மொழியிலும் உள்ளன. 1962. சாதாரணமாக நான்கு தந்திகளே. நமது நாட்டில் மைசூர் சௌடய்யா என்ற வித்துவான் ஏழு தந்திகள் அமைத்துத் திறமையுடன் வாசித்து வந்தார். 1763. ஏக்கருக்கு 4840 சதுர கெஜங்கள். 1764. விளையாட்டுப் போட்டிகளின் ஐந்து நிகழ்ச்சிகளிலும் ஒரே குழு கலந்து கொள்ளுவதற்கு இப்பெயர். 1765. எட்டுக் கைகள். 1766. டான்யூப் நதி. இதற்கு நீல டான்யூப் (Blue Danube) என்றும் பெயர். 1767. மரகதத் தீவு. 1768. மேலே கருத்த பொடி வர்ணம், கீழே கறுப்பு. 1769. கறுப்பு அன்னப் பறவை. 1770, நீலம், மஞ்சள், சிவப்பு ஆகிய வண்ணங்களில். 1771. நாட்டை, கௌளை, ஆரபி, வராளி, ஸ்ரீராகம் என்ற வரிசையில்.

'கோகுலம்'த்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளியால் வெளியிடப்பட்டது ● ஆசிரியர்: கே. ஆர். ஆத்மநாதன்



சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லா தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!......
பிரவுன் & போல்ஸன்
வெரய்ட்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க புடிங், பாயசம், ரபடி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
Brown & Polson
Cornflour
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
கபாப், சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
Brown & Polson
REX
BAKING POWDER
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பக்கோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவைபட அதிமென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
உங்கள் சமையல் உன்னதமாய் இருக்க உயர்ந்த சாமானையே உபயோகியுங்கள்
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள்
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ், எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.



SIMOES/AG/3/75